Registered as a NewsPaper

விலை ரூபா : 8.00

# ஈழநாதம்

மக்கள் நாளிதழ்

பக்கங்கள்-12

நாதம் -16 திருவள்ளுவர் ஆண்டு- 2036 வைகாசி-15 29-05-2005 ஞாயிற்றுக்கிழமை ஓசை 100


S.M கோல்ட் ஹவுஸ்
வவுனியா நகரில் அசல் 22 கரட் தங்க நகைகளை உங்கள் விருப்பத்திற்கேற்ப தெரிவு செய்து பெற்றுக்கொள்ள
S.M கோல்ட் ஹவுஸ்
இல:-46A, தர்மலிங்கம் வீதி, வவுனியா.
உரிமையாளர்:- S.M.சண்முகரத்தினம்
T.P: 024-222 4247 (சி-11901)

## சுனாமிக்குப் பின்னான த.பு.கவின் பணிகள் குறித்து கொழும்பில் கிளிங்டனைச் சந்தித்து ரெஜி விளக்கினார்



கிளிங்டனுடன் கே.பி.ரெஜி



கிளிங்டனுடன் த.பு.க.அமெரிக்கக் கிளை உறுப்பினர் அருச்சுனா

(கொழும்பு)

தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர் கே.பி. ரெஜி அவர்கள் ஐ.நாவின் விசேட பிரதிநிதியும் முன்னாள் அமெரிக்க சனாதிபதியுமான பில்கிளிங்டன் அவர்களை சிறிலங்காவின் தலைநகர் கொழும்பில் சந்தித்து சுனாமிக்குப் பின்னரான தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் பணிகள் குறித்தும் அதன் செயற்பாடுகளுக்கு சிறிலங்கா இராணுவம் மேற்கொள்ளும் இடையூறுகள் பற்றியும் விளக்கிக் கூறியுள்ளார்.

வடக்கு கிழக்கில் சுனாமிக்குப் பின்னரான தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் புனரமைப்புப் பணிகள் குறித்து விளக்கியதுடன் நிவாரண, புனரமைப்புப் பணிகளில் இன்றைய அரசியல் சூழ்நிலை காரணமாக தமிழர் புனர்வாழ்வுக் கழகம் சந்திக்கும் பிரச்சினைகள் குறித்தும் விளக்கினார்.

அத்துடன் நிவாரண, புனரமைப்புப் பணிகளுக்காக பொருட்களை வடக்குக் கிழக்குப் பகுதிகளுக்கு எடுத்துச் செல்லும் போது தமிழர் புனர்வாழ்வுக் கழகம் சந்திக்கும் பிரச்சினைகளை (12ஆம் பக்கம் பார்க்க)

# அமெரிக்க முன்னாள் சனாதிபதி கிளிங்டன் பொதுக்கட்டமைப்பிற்கு முழு ஆதரவு!

## புலிகளின் நிர்வாகப் பகுதிகளையும் பார்வையிட விருப்பம் தெரிவிப்பு

(கொழும்பு)

**சுனாமி நிவாரணப் பணிகளையும் மீள் கட்டுமானப் பணிகளையும் மேற்கொள்ளப் பொதுக் கட்டமைப்பு நல்லதொரு யோசனை எனவும், இதற்குத் தனது முழு ஆதரவும் உண்டு எனவும் முன்னாள் அமெரிக்க சனாதிபதியும், ஐ.நா.சபை விசேட தூதுவருமான பில்கிளிங்டன் தெரிவித்தார். மேலும் அவர் விடுதலைப்புலிகளின் நிர்வாகப் பகுதிகளையும் பார்வையிடவிரும்புவதாகவும் தெரிவித்தார்.**

சுனாமியால் பாதிக்கப்பட்ட பகுதிகளின் மீள்கட்டுமானப்பணி பற்றியும் பாதிக்கப்பட்ட மக்களின் புனர்வாழ்வு பற்றியும் ஆராய்வதற்காக கொழும்பு வந்த பில்கிளிங்டன் சுனாமியால் பாதிப்பிற்குள்ளாகிய கல்முனைப் பகுதிக்கு விஜயம் செய்தார். அவர் அங்கு அதிகாரிகளையும்,அரசசார்பற்ற அமைப்புக்களின் பிரதிநிதிகளையும் சந்தித்துப் பேசினார். இதன்பின்னர் ஊடகவியலாளரிடம் பேசிய அவர்,

ஆழிப்பேரலை மீளமைப்புக்கான பொதுக்கட்டமைப்பை அனைத்துக்கட்சித்தலைவர்களும் ஆதரிக்கவேண்டும் (12ஆம் பக்கம் பார்க்க)

## மட்டக்களப்பில் துப்பாக்கிச் சூடு; பொலிஸ் அதிகாரி அதே இடத்தில் பலி!

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பில் இனந்தெரியாதோரின் துப்பாக்கிச் சூட்டில் சிறிலங்கா பொலிஸ் சப்இன்ஸ் பெக்டர் ஒருவர் அதே இடத்திலேயே பலியாகியுள்ளார்.

இச்சம்பவம் நேற்று மாலை 6.30 மணிக்கு இடம்பெற்றுள்ளது.

மட்டக்களப்பு பொலிஸ்நிலையத்தில் பணியாற்றும் ஜூட் தியாகராஜா (வயது -41) என்பவரே சுட்டுக் கொல்லப்பட்டார். மட்டக்களப்பு நகரில் 24 மணி நேரமும் பாதுகாப்பு மிக்க பிரதேசமென கருதப்படும் வீதியொன்றிலேயே இச் சம்பவம் நடந்துள்ளது.

பொலிஸ் நிலையத்திலிருந்து துவிச்சக்கரவண்டியில் முதலியார் வீதியிலுள்ள தனது வீட்டிற்குச் சென்று கொண்டிருந்த போது வீதியில் எதிர்கொண்ட நபர் ஒருவர் இத் துப்பாக்கிப் பிரயோகத்தை மேற்கொண்டுள்ளார். கழுத்திலும், மார்பிலும், மூன்று இடங்களில் ஒன்பது மில்லி மீற்றர் ரக கைத்துப்பாக்கிச் சூட்டுக் காயங்களுக்கு உள்ளான (12ஆம் பக்கம் பார்க்க)

## சு.ப.தமிழ்ச்செல்வன் -வன்னி பா.உ கள் நேற்று முக்கிய விடயங்கள் குறித்து ஆராய்வு

(அலுவலக செய்தியாளர்)

இலங்கை தமிழரசுக்கட்சியின் வன்னி மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர்களைதமிழீழ அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் அவர்கள் சந்தித்துக்கலந்துரையாடியுள்ளார்.

நேற்று மாலை5.30 மணிக்கு தமிழீழ விடுதலைப்புலிகளின் சமாதானச் செயலகத்தில் நடைபெற்ற இக்கலந்துரையாடலில் முக்கியமான மூன்று விடயங்கள் கலந்துரையாடப்பட்டன.

சமாதான காலத்தில் படைத்தரப்பினால் மேற்கொள்ளப்பட்டுவரும் ஒப்பந்த மீறல்கள் குறிப்பாக புதிய இராணுவ முகாம்களை அமைத்தல், இராணுவத் தடைமுகாம்களை அமைத்தல், சனநாயக ரீதியாக போராடுகின்ற மக்கள் மீதான ஆயுத ரீதியாக அடக்குமுறைச்செயற்பாடுகள் தொடர்பாகவும் விடுதலைப்புலிகளுக்கும், தமிழ் கூட்டமைப்பிற்கும் இடையேயான (12ஆம் பக்கம் பார்க்க)

## இனப்பிரச்சினைக்கு பேச்சுவார்த்தை மூலம் தீர்வு காண அமெ. சனாதிபதி புஷ் வலியுறுத்து

இலங்கையின் இனப்பிரச்சினைக்கு விரைவில தீர்வு காண அனைத்துத் தரப்பினையும் அமெரிக்க அதிபர் புஷ் வலியுறுத்தியுள்ளார்.

அமெரிக்காவுக்கான புதிய சிறிலங்காத் தூதுவர் பெர்னார்ட் ஏபி குணதிலக்க அதிபர் புஷ்சை வெள்ளை மாளிகையில் சந்தித்துப் பேசுகையில் அவர் இதைத் தெரிவித்தார்.

இந்தச் சந்திப்பில் புஷ் மேலும் கூறியதாவது; சனநாயக அரசியல் நோக்கங்களுக்காக, ஆயுதமேந்துவதை ஏற்க முடியாது. இலங்கையில் இரு தரப்பு அமைதிப் பேச்சுக்கள் மூலமே இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண முடியும்.

சிறிலங்காவின் இறையாண்மை மற்றும் ஒற்றுமையை மதிக்கக் கூடிய வகையிலான அமைதிப்பேச்சுக்களை அமெரிக்கா ஆதரிக்கும். 2002ஆம் ஆண்டு ஏற்படுத்தப்பட்ட (12ஆம் பக்கம் பார்க்க)

## மருத்துவ தேவைகளை நிறைவு செய்யும் வகையில் தாயகத்தில் மருத்துவத்துறை வளர்க்கப்பட வேண்டும்

### -தமிழீழ அரசியல்துறை துணைப்பொறுப்பாளர்-

(கிளிநொச்சி)

மக்களின் மருத்துவத் தேவைகளை நிறைவு செய்யும் வகையில் எதிர்காலத்தில் தமிழர் தாயகத்தில் மருத்துவத்துறை வளர்த்தெடுக்கப்பட வேண்டும் என்று தமிழீழ அரசியல் துறை துணைப்பொறுப்பாளர் சோ.தங்கன் கேட்டுக்கொண்டுள்ளார்.

கிளிநொச்சியில்உள்ள தமிழீழ விடுதலைப் புலிகளின் திட்டமிடல் செயலகத்தில் நேற்று நடைபெற்ற வடக்குக் கிழக்கு சுகாதார அபிவிருத்தி தொடர்பான கலந்துரையாடலில் கலந்து கொண்டு கருத்துத்தெரிவிக்கும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது; எங்களுடைய வடக்குக் கிழக்கு தாயகப் பிரதேசத்திலே (12ஆம் பக்கம் பார்க்க)

## கண்காணிப்புக்குழு – எழிலன் திருமலையில் நேற்று சந்திப்பு

(திருமலை)

போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் திருகோணமலை மாவட்ட தலைவருக்கும், தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையில் நேற்று சம்பூரில் பேச்சுவார்த்தை ஒன்று நடைபெற்றது. இதன்போது தற்போதைய திருகோணமலை மாவட்ட போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் தலைவர் ஜான் மாற்றலாகி புதிய தலைவராகச் செயற்படப்போகும் ஆதர் தமிழீழ விடுதலைப்புலிகளுக்கு அறிமுகம் செய்துவைக்கப்பட்டார்.

அத்துடன் திருகோணமலையின் தற்போதைய நிலவரம் குறித்தும் கருத்துக்கள் பரிமாறப்பட்டதாக தமிழீழ விடுதலைப்புலிகளின் திருமலை மாவட்ட அரசியல்துறை பொறுப்பாளர் எழிலன் தெரிவித்தார்.

சர்ச்சைக்குரிய புத்தர்சிலை அமைப்பு விடயத்தை எதிர்வரும் 2ஆம் திகதியுடன் முடிவுக்கு கொண்டு வர அரசாங்கம் உறுதியளித்துள்ளது.

இது நிறைவேற்றப்பட வேண்டும் ஏற்கனவே நகரசபையின் அனுமதியுடன் புதிய (12ஆம் பக்கம் பார்க்க)

# வரிவிளம்பரம்


**விசேட ஆங்கில வகுப்புக்கள்**
**GRAMMAR $ SPOKEN.**

O/L,A/L மாணவர்களுக்கும் தொழில்புரிவோருக்கும் காலம்- புதன், சனி, ஞாயிறு மாலை 5-6 மணி இடம்:-அன்னைவேளாங் கன்னி ஆலயம் முன்பாக, உதய நகா -கிழக்கு ஆசிரியர்-K.YO KAN (BBA$NDE). (6141)

**காணி விற்பனைக்குண்டு**

புதுக்குடியிருப்பு கைவேலி யில் தென்னங்கன்றுகள் நடப்பட்ட நிலையில், 02ஏக்கர் உறுதிக்காணி விற்பனைக்குண்டு. தொடர்புக்கு -நவரட்ணம் (நவம்),கைவேலி (காலை 7.30 இற்கு முன் வருகை தரவும்.) (6160)




கட்டி முடிக்கப்பட்ட கிளி. கால்நடை வைத்திய நிலையம் நீண்ட நாட்களாக திறக்கப்படாமல் உள்ளது. இதேபோன்று பூநகரி கால்நடை வைத்திய நிலையமும் திறக்கப்படாமல் உள்ளது குறிப்பிடத்தக்கது. (05)

# சமகாலத்திற்கேற்ப மக்களைத் தயார்ப்படுத்தும் வீரமுரசு எழுச்சி நிகழ்வு நாளை கண்டாவளையில்

தன்இனமே பெரிது என்று தலைவன் வழிசென்று தம் உயிரை ஈந்த அந்த வீரப்புருசர் களைப் பெற்றெடுத்த பெற்றோர் களை கௌரவிக்கும் நிகழ்வும் சமகாலத்துக்கு ஏற்ப மக்களைத் தயார் ப்படுத்தும் வீரமுரசு எழுச்சி நிகழ்வும் நாளை கண்டாவளை யில் நடைபெறவுள்ளன.

மாலை மூன்று மணிக்கு கண்டாவளை மகாவித்தியாலய முன்றலில் அமைக்கப்பட்டிருக்கும் மாவீரர் நினைவாலயத்தில் இந் நிகழ்வு நடைபெறவுள்ளது .

இந்நிகழ்வில் விசுவமடுப் பிர தேச பொது அமைப்புக்களின் பிர திநிதிகள் விடுதலைப்புலிகளின் துறைசார் பொறுப்பாளர்கள், போராளிகள், மக்கள் என அனை வரையும் கலந்து சிறப்பிக்குமாறு கண்டாவளை தேசிய எழுச்சிப் பேரவையினர் அன்புடன் அழைக்கின்றனர். (14)

## த.ஆ சங்க ஆட்சி மன்ற கூட்டம் ஒத்திவைப்பு

(திருகோணமலை)

திருகோணமலை ஸ்ரீ விக்கி னேஸ்வரா மகாவித்தியாலயத்தில் நேற்றும், இன்றும் நடைபெறவி ருந்த இலங்கைத் தமிழர் ஆசிரி யர் சங்கத்தின் ஆட்சிமன்றக் கூட் டம் தவிர்க்க முடியாத காரணங் களினால் ஒத்தி வைக்கப்பட்டுள்ள தாக சங்கத்தின் பொதுச் செயலா ளர் த.மகாசிவம் தெரிவித்தார்.

அன்றைய தினம் இங்கைத் தமிழர்ஆசிரியர் சங்கத்தின் இணை யத்தளத்தின் அங்குரார்ப்பண நிகழ்வும் இடம் பெறவிருந்தது. அதுவும் ஒத்திவைக்கப்பட்டுள்ள தாகவும் பொதுச்செயலாளர் மகாசிவம் தெரிவித்தார். (25)

## துணைப்படை வீரர் 2ஆம் லெப் சிவகாந்தினியின் வித்துடல் புனித விதை குழியில் விதைப்பு

கடந்த புதன்கிழமை தவறுத லான வெடிவிபத்தின் போது சாவ டைந்த தமிழீழ தேசிய துணைப் படைவீரர் 2ஆம் லெப்.சிவகாந் தினியின் வித்துடல் நேற்று முன்தி னம் பிற்பகல் 2.00 மணிக்கு குமு ழமுனை ஆறுமுகத்தானிலுள்ள அவரது இல்லத்தில் வைக்கப் பட்டு பிற்பகல் 3.00மணிக்கு ஆறு முகத்தான் குளம் அ.த.க.பாடசா லையில் வைக்கப்பட்டு அங்கு வீரவணக்கக் கூட்டம் இடம் பெற் றது.

முல்லை.மாவட்ட ஊரகவளர்ச் சிப்பொறுப்பாளர் குமரன் தலை மையில் இடம் பெற்ற வீரவணக் கக் கூட்டத்தில் வீரவணக்க உரைகளை முல்லை.மாவட்ட அர சியல்துறை துணைப் பொறுப் பாளர் செல்வம், குமுழமுனை தேசிய எழுச்சிப் பேரவை செய லர் மற்றும் தேசிய துணைப்படை உறுப்பினர்கள் நிகழ்த்தினர்.

தொடர்ந்து அலங்கரிக்கப்பட்ட ஊர்தியில் வித்துடல் முள்ளிய வளை மாவீரர் துயிலுமில்லத் திற்கு எடுத்துச்செல்லப்பட்டு மாலை 5.30 மணிக்கு பூரண இரா ணுவ மரியாதையுடன் புனித விதை குழியில் விதைக்கப்பட்டது. (20)

# உளவளத்துணைச் சேவையின் மாதாந்த கூட்டத்தில் இனங்காணப்பட்ட விடயங்கள்

(அலுவலக செய்தியாளர்)

உளவளத்துணைச்சேவை மாதாந்த ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் நேற்று கிளிநொச்சியி லுள்ள மனித உரிமைகள் செயல கத்தில் நடைபெற்றது

நேற்றுக்காலை 10.00 மணியா ளவில் உளவத்துணைச் சேவை ஒருங்கிணைப்புக் குழுத் தலைவர் அருட்தந்தை கருணாரட்ணம் அடி கள் தலைமையில் நடைபெற்றது.

நலவாழ்வு அபிவிருத்தி நிறு வனத்தின் ஒருங்கமைப்பில் நடை பெற்ற மேற்படிகூட்டத்தில் அன்னை இல்லம், நலவாழ்வு அபிவிருத்தி நிறுவனம், கியூடெக் நிறுவனம் தமிழர் புனர்வாழ்வுக் கழகம், ஐ.சி. ஆர்.சி. நிறுவனப்பிரதிநிதிகள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

நேற்றைய கூட்டத்தில் இனங் காணப்பட்ட விடயங்கள்

* உளவளத்துணையோடு சம் பந்தமான முழுவதும் அடங்கிய நிலையம் ஒன்று அமைக்க வேண் டும் என்றும், அதற்கு ஒரு திட்ட முன்மொழிவு நலவாழ்வு அபி விருத்தி நிறுவனத்தினால் தயாரித்து அடுத்த மாதம் 10ஆம் திகதிற்கு முன்னர் முன்வைக்க வேண்டும் எனவும் எல்லோராலும் கேட்கப்பட்டது.

* ஒருங்கிணைக்கும் நல வாழ்வு அபிவிருத்தி நிருவனத்தில் உளவளத்துணைச்சேவை மேற் கொள்ளும் அனைவரும் பதிவு செய்து அடையாள அட்டை வைத்திருக்கவேண்டும்.

* அனைவருக்குமான ஒரு பயிற்சித்திட்டம் தயாரித்து தொடர் பயிற்சிகள் வழங்கவேண்டும்.

* உளநல மருத்துவர் தேவைப்படுவதனால் வெளிநாடுக ளில் உள்ள தமிழ் பேசக்கூடிய மருத்துவர்களின் உதவியைக் கேட்கவேண்டும்

அப்படி ஒரு மருத்துவர் வந் தால் அவருக்கு கொடுப்பனவு வழங்க ஐ.சி.ஆர்.சி முன்வரும் எனவும் கூறப்பட்டது.

ஒவ்வொரு மாதமும் 10 ஆம் திகதி ஒருங்கிணைப்புக் கூட்டம் நடைபெறும் என தெரிவிக்கப்பட்டு எல்லோராலும் ஏற்றுக் கொள்ளப் பட்டது. (கு)

# கோணாவில் கரிகாலன் முன்பள்ளிச் சிறார்களின் விளையாட்டு விழா

தமிழர் புனர்வாழ்வுக் கழகத் தின் முன்பள்ளிக் கல்விமேம்பாட்டு நிலையத்தின் நிர்வாக அனுசரணை யின் கீழ் நிர்வகிக்கப்பட்டு வரும் கிளிநொச்சி மாவட்டம் கோணாவி லில் அமையப்பெற்ற கரிகாலன் முன்பள்ளிச்சிறார்களின் வருடாந்த விளையாட்டு விழா முன்பள்ளி இணைப்பாளர் ரஜினி தலைமை யில் இடம்பெற்றுள்ளது.

நேற்று முன்தினம் பிற்பகல் 4.30 மணியளவில் கரிகாலன் முன் பள்ளி மைதானத்தில் இடம் பெற்ற இந்த விளையாட்டு விழா நிகழ்வானது கோணாவில் கிராம அலுவலகரும், கோணாவில் உப தபாலதிபரும் மங்கல விளக்கேற் றியதைத் தொடர்ந்து தேசியக் கொடியினை கோணாவில் காந் திக் கிராம ஊரக வளர்ச்சிப்பணிப் பொறுப்பாளர் தசரதன் ஏற்றிவைத் தார். இதனையடுத்து தமிழர் புனர்வாழ்வுக்கழகக் கொடியினை தமிழர் புனர்வாழ்வுக்கழக உழைக் கும் மகளிர் இணைப்பாளர் தேவிகா ஏற்றியதையடுத்து முன் பள்ளிக்கல்விமேம்பாட்டுக் கொடி, கோணாவில் கிராமிய புனர் வாழ்வு அபிவிருத்திக் கொடி, கரி காலன் முன்பள்ளிக் கொடி என் பன ஏற்றிவைக்கப்பட்டன.

இதனைத் தொடர்ந்து வரவேற் புரையை முன்பள்ளிச் சிறார் களது பெற்றோர்களில் ஒருவரான சுமதி என்பவர் நிகழ்த்தியதை யடுத்து ஆசியுரையை கோணா வில் கிராம அலுவலர் வழங்கி னார். தொடர்ந்து ஒலிம்பிக் தீபம் ஏற்றப்பட்டு நிகழ்ச்சி நிரல்களுக் கமைய சிறுவர்களின் விளை யாட்டு நிகழ்வுகள் ஒன்றின் பின் ஒன்றாக நடைபெற்றன.

சிறார்கள் மிகுந்தஉற்சாகமாக வந்து குதூகலிப்புடன் இடம் பெற்ற இந்த விளையாட்டு விழா நிகழ்வில் சிறார்களின் ஒவ்வொரு விளையாட்டும் சிறார்களின் பெற்றோர்களையும் பார்வையா ளர்களையும் மகிழ்ச்சியில் ஆழ்த் தியிருந்தமை குறிப்பிடத்தக்கது.


# துயர் பகிர்வோம்



மலர்வு 17 - 07 - 1932

உதிர்வு 27 - 05 - 2005

அமரர்

**செல்லத்துரை -முத்துக்குமார் ரகுபதி திட்டம் மூங்கிலாறு, விசுவமடு**

எமது நிறுவனமான வன்னியன் ஊர்திப் பகு தியில் பணிபுரியும் செல்வக்குமாரின்(வதனன்) தந்தை யாரின் மறைவுச் செய்திகேட்டு அதிர்ச்சியடைந்த நாமும் அன்னாரின் பிரிவால் துயருறும் குடும்பத்தின ருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரியப்படுத் துவதோடு அன்னாரின் ஆத்மாசாந்தியடைய இறை வனை இறைஞ்சுகின்றோம்.

தகவல்:-
பணிப்பாளர், பணியாளர்கள்,
வன்னியன் ஊர்திப்பகுதி,
கிளிநொச்சி

(6215)

# 5 ஆம் நாள் கண்ணீர் அஞ்சலி



சிவநாதன் ~ லிங்கேஸ்வரி(குட்டி)
(பளை/மத்திய கல்லூரி மாணவி)

2005.05.25 காலமான எமது அன்புத் தங்கையின் ஐந்தாம் நாள் நினைவஞ்சலி யினை நினைவு கூரு கின்றோம். இவ்வறி வித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறி யத்தருகின்றோம்.

தகவல்:-
சிவநாதன் சத்தியா,
கச்சார் வெளி,
பளை.

(6214)

# இன்று யாழ்.மண்ணில் சக்தி TV சக்தி FM நடத்தும் மாபெரும் இசை நிகழ்ச்சி

சக்தி FM

இன்று யாழ்.மண்ணில் முதன்முதலாக சக்தி FM இன் அறிவிப்பாளர்களுடன் ராஜன் இசைக்குழுவினரும் தமிழீழ எழுச்சிப்பாடகர்களான சாந்தன், சுகுமார் ஆகியோரும் யாழ்.மண்ணில் முதன்முதலாக இணைந்து நடத்தும் மாபெரும் இசைச்சங்கமம்

யாழ்.மக்கள் என்றுமே கண்டிராத வகையில் வண்ண ஒளிவிளக்குகளுடன் கூடிய மேடை அமைப்பில் இலங்கையின் பிரபல நடனக்கலைஞர்களின் இன்னிசை நடன விருந்தும் இடம்பெறக்காத்திருக்கின்றது
காணத்தவறாதீர்கள்

இடம்: யாழ்.பொது விளையாட்டு அரங்கு

காலம்:29.05.2005 ஞாயிற்றுக்கிழமை மாலை 6 மணி (சி.12119)




ஈராக்கின் டிக்ரிட் நகரில் பொலிசாரின் தாக்குதலில் இரு பொதுமக்கள் கொல்லப்பட்டும், 18 பேர் காயமடைந்ததற்கும் பதிலடியாக நேற்று முன்தினம் ரோந்துப் பொலிசார்மீது நடத்தப்பட்ட கார்க்குண்டுத் தாக்குதலில் காயமடைந்தவர்கள் விரைவாக அப்புறப்படுத்தப்படுகின்றனர்.

## சவுதி அரேபியா மன்னர் கவலைக்கிடம்

சவுதி அரேபிய மன்னர் பாக் உடல் நலக்குறைவு காரணமாக ரியாத் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். அரம்பத்தில் இவரின் உடல் நிலை கவலைக்கிடமாக இருந்தபோதும் தற்போது ஓரளவு தேறியுள்ளதாக செய்திகள் வெளியாகியுள்ளன.

இதைத்தொடர்ந்து அவரது பொறுப்புக்களை மன்னரின் மகன் இளவரசர் அப்துல்லா கவனித்து வருகிறார்.



அமெரிக்காவின் இலினோய் கடலில் மீனவர் ஒருவனால் பிடிக்கப்பட்ட 124 இறாத்தல் சுமார் (57 கிலோ எடை) கொண்ட மீன் இயற்கை வள பாதுகாப்புத் திணைக்களத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. இதன் நீளம் ஏறத்தாழ 44 அங்குலம் (4 அடி)யாகும்.

## பேச்சுவார்த்தையில் உடன்பாடு
## பி.பி.சி பணியாளரின் வேலை நிறுத்தம் முடிந்தது

(லண்டன்)

பி.பி.சி நிறுவன ஊழியர்கள் அடுத்த வாரம் நடத்தத் திட்டமிட்டிருந்த 48மணி நேர வேலை நிறுத்தத்தைக் கை விடுவதென முடிவு செய்யப்பட்டுள்ளது.

புகழ்பெற்ற பி.பி.சி நிறுவனத்தில் உலகம் முழுவதும் 27 ஆயிரம் ஊழியர்கள் பணியாற்றுகின்றனர். செலவைக் குறைக்கும் பொருட்டு 4 ஆயிரம் ஊழியர்களை ஆட்குறைப்புச் செய்யப் போவதாக இந் நிறுவனத்தின் இயக்குனர் மார்க் தோம்சன் அறிவித்திருந்தார். இதைக் கண்டித்து சமீபத்தில் பி.பி.சி ஊழியர்கள் ஒரு நாள் வேலை நிறுத்தம் செய்தனர். அது மட்டுமல்லாது வரும் 31ஆம் திகதி மற்றும் அடுத்த மாதம் முதல் திகதி ஆகிய நாட்களில் வேலை நிறுத்தம் செய்யத் திட்டமிட்டிருந்தனர்.

பி.பிசியின் மூன்று ஊழியர் சங்கத்துடன் நிர்வாகம் 20 மணி நேரம் பேச்சுவார்த்தை நடத்தியதில் உடன்பாடு ஏற்பட்டது. இதையடுத்து அடுத்த வாரம் நடத்த இருந்த வேலை நிறுத்தத்தை ஊழியர்கள் வாபஸ் பெற்றுள்ளனர்.

# இந்தோனேஷியாவில் இரு குண்டு வெடிப்புக்கள்
# பத்தொன்பது பொதுமக்கள் உயிரிழப்பு

(ஜகார்த்தா)

***மத்திய இந்தோனேஷியாவில் அலுவேசித் தீவின் சந்தைக்குள் இடம்பெற்ற இரண்டு குண்டு வெடிப்புச் சம்பவங்களில் பத்தொன்பது பொதுமக்கள் உடல் சிதறிப்பலியாகியுள்ளனர்.***

நேற்ற இடம் பெற்ற இவ்விரண்டு குண்டு வெடிப்புச் சம்பவங்களிலும் பெரும் எண்ணிக்கையானோர் காயமடைந்துள்ளனர்.

1998ஆம் ஆண்டில் இதே தீவுப் பகுதியில் இடம்பெற்ற இனக் கலவரங்களின் போது பல நூற்றுக் கணக்கான மக்கள் படு கொலை செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

தொடர்ச்சியாக நடைபெற்ற வன்முறைகளை அடுத்து 2001 ஆம் ஆண்டில் முஸ்லிம் மற்றும் கிறிஸ்தவ மக்களுக்குமிடையில் சமாதான ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்ட போதும் வன்முறைகள் தொடர்வது குறிப்பிடத்தக்கது.



நேற்று பாக்தாத்தில் ஆரம்பமான "இடி முழக்கம்" இராணுவ நடவடிக்கையின் போது தேடுதலில் ஈடுபடும் ஈராக்கிய இராணுவத்தினர்.


## சனாதிபதியை நேரடியாகத் தேர்ந்தெடுக்கும் யோசனைக்கு எகிப்திய மக்கள் ஆதரவு

(கெய்ரோ)

எகிப்து நாட்டின் அதிபராக ஹோஸ்னி முபாரக் இருந்து வருகிறார். 1981ஆம் ஆண்டு முதல் தொடர்ந்து இவர் ஆட்சியில் இருந்து வருகிறார்.

இப்போதுள்ள முறைப்படி ஆளும் கட்சியினர் சனாதிபதியைத் தேர்ந்தெடுப்பார்கள். இதை மாற்றி விட்டு வாக்காளர்களே நேரடியாக வாக்களித்து சனாதிபதியைத் தேர்ந்தெடுக்கலாமா என்பதை தீர்மானிப்பதற்கான வாக்கெடுப்பு நேற்று முன்தினம் நடந்தது.

53.62 சதவீதம் மக்கள் இந்த வாக்கெடுப்பில் கலந்து கொண்டனர். அவர்களில் 82.9 சதவீதம் பேர் நேரடியாக வாக்களித்து தேர்ந்தெடுப்பதற்கு ஆதரவு தெரிவித்தனர்.



அமெரிக்காவிலுள்ள இராணுவ கல்லூரியொன்றில் ஆப்கானிஸ்தான் ஈராக் சம்பவங்கள் குறித்து உரையாற்றும் அமெரிக்க அதிபர் ஜோர்ஜ் புஷ்.

# பேரழிவு ஆயுதத் தாக்குதலைச் சமாளிப்பது எப்படி
# இந்.படைக்கு சுவிஸ். சிறப்புப் பயிற்சி வழங்கத் தயார்

பேரழிவு ஏற்படத்தக்க ஆயுதத் தாக்குதல் இடம்பெற்றால் அதைச் சமாளிப்பது எப்படி என்று இந்தியப் படையினருக்கு சிறப்புப் பயிற்சியளிக்கத் தயார் என இந்தியாவுக்கு சுவிற்சர்லாந்து தெரிவித்துள்ளது.

இச் சனாதிபதி அப்துல் கலாம் சுவிற்சர்லாந்தில் சுற்றுப் பயணம் செய்து வருகிறார். சுவிற்சர்லாந்து அதிபர் சாமுவேல் ஸ்கிமிட் உட்பட பல்வேறு தலைவர்களையும் அப்துல் கலாம் சந்தித்துப் பேசினார். இதன் போதே சாமுவேல் இதனைத் தெரிவித்துள்ளார்.

இரு நாடுகளுக்கும் இடையே தகவல் தொழில் நுட்பம், உயிரியல் தொழில் நுட்பம் ஆகிய துறைகளில் ஒத்துழைப்புத் தொடர்பாக பேச்சு நடத்தினார்கள்.

இந்தியாவுக்கு பாதுகாப்புத் துறையில் உதவவும் சுவிற்சர்லாந்து முன் வந்துள்ளது. ஆபத்து காலத்தில் நிலைமைகளை சமாளிப்பது எப்படி பேரழிவு ஆயுதங்கள் கொண்டு தாக்குதல் நடத்தினால் அதைச் சமாளிப்பது எப்படி என்பது குறித்து இந்திய இராணுவத்துக்குச் சிறப்பு பயிற்சி அளிக்க சுவிற்சர்லாந்து முன் வந்துள்ளது.

குறுகிய காலப் பயிற்சியாக இது அமையும். இதே போல் இராணுவத்திற்கு மலையேற்ற பயிற்சியும் அளிக்கப்படும்.

இந்தப் பேச்சுவார்த்தையின் போது ஐக்கிய நாடுகள் பாதுகாப்பு சபையில் இந்தியாவுக்கு நிரந்தர இடம் அளிப்பது தொடர்பான பிரச்சினையில் இந்தியாவுக்கு ஆதரவு அளிக்குமா என்பது பற்றி சுவிற்சர்லாந்து எதுவும் தெரிவிக்கவில்லை.

## துருக்கிய நகர் ஒன்றின் மேயர் குண்டுத் தாக்குதலில் பலியானார்

துருக்கியிலுள்ள அட்டா செண்ட் நகர மேயராக இருந்தவர் பெவ்ஜிடோகான். 55 வயதான இவர் தனது எலுமிச்சைத் தோட்டத்தில் இருந்த போது குண்டு வெடித்தது. இதில் பலத்த காயம் அடைந்த அவர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு பின்னர் இறந்து போனார்.

இந்தச் சம்பவத்திற்கு எந்த ஒரு அமைப்பும் பொறுப்பேற்கவில்லை.

துருக்கி நாட்டில் வசிக்கும் குர்திஷ் இன மககள் தனிநாடு கோரிப் போராடி வருகின்றார்கள் இது தவிர இடது சாரி தீவிரவாதிகளும் இஸ்லாமியத் தீவிரவாதிகளும் கடந்த காலத்தில் குண்டு வீசித் தாக்குதல் நடத்தியுள்ளனர்.

இந்த மூன்று பிரிவினரில் யார் இந்தத் தாக்குதலை நடத்தியது என்பது தெரியவில்லை.

# திப்பு சுல்தானின் பொருட்கள் எட்டுக்கோடி ரூபா ஏலம்

(லண்டன்)

மைசூர் மன்னர் திப்பு சுல்தான் பயன்படுத்திய துப்பாக்கி, வெண்கலப் பீரங்கிகள், அபூர்வ ரக கத்தி உட்பட பல்வேறு பொருட்களை மதுபான சக்கரவர்த்தி விஜய் மல்லையா எட்டுக் கோடி ரூபாவிற்கு ஏலம் எடுத்தார்.

பதினெட்டாம் நூற்றாண்டில் மைசூரை ஆண்டவர் மகாராஜா திப்பு சுல்தான். அவரிடம் இருந்த அபூர்வ கலைப் பொருட்கள் அவர் பயன்படுத்திய கத்தி உட்பட பல்வேறு பொருட்களை பிரிட்டிஷ் படை கொள்ளை அடித்துச் சென்றது. திப்பு பயன்படுத்திய வாளை, மதுபான நிறுவனங்களின் தலைவரான விஜய் மல்லையா இரண்டு ஆண்டுகளுக்கு முன் ஏலத்தில் எடுத்து இந்தியா கொண்டு வந்தார். திப்பு பயன்படுத்திய மற்றப் பொருட்களையும் பிரிட்டனில் இருந்து இந்தியா கொண்டு வரும் முயற்சியில் மல்லையா ஈடுபட்டுள்ளார். திப்பு பயன்படுத்திய துப்பாக்கி, வெண்கல பீரங்கிகள் அபூர்வமான கத்திகள் உட்பட ஏழு பொருட்கள் லண்டனில் கடந்த புதன் கிழமை ஏலம் விடப்பட்டது. மல்லையா இதில் கலந்து கொண்டு எல்லாப் பொருட்களையும் ரூ.8கோடிக்கு ஏலத்தில் எடுத்தார். 'சோதேபை' என்ற ஏல நிறுவனம், இப் பொருட்களை ஏலம் விட்டது. இது தொடர்பாக இந் நிறுவனத் தலைவர் எட்வர் ஜிப்ஸ் கூறுகையில் "ஏல முடிவு எங்களுக்கு மகிழ்ச்சி அளிக்கிறது. இப் பொருட்களை ஏலம் எடுக்க கடும் போட்டி நிலவியது தொலைபேசி மூலமும் ஏலம் கேட்கப்பட்டது" என்றார்.

# மட்டக்களப்பில் கடல் கொந்தளிப்பால் மக்கள்

# சுனாமி பீதி கொண்டு அல்லோலகல்லோலம்!

## -திருமலை சலப்பை ஆற்றுப்பாலமும் அடித்துச் செல்லப்பட்டது

(மட்டக்களப்பு)

**மட்டக்களப்பு மாவட்டத்தில் நேற்று முன்தினம் ஏற்பட்ட கடல் கொந்தளிப்புக் காரணமாக மக்கள் சுனாமியோ எனப் பீதி கொண்டு பதறி அடித்து ஓடிப்பெரும் அல்லோலகல்லோலப்பட்டனர்.**

வாகரை தொடக்கம் மட்டக்களப்பு வரை மக்களிடையே இந்தப் பரபரப்புக் காணப்பட்டது.

வழமையாக இந்த மாதங்களில் கடல் கொந்தளிப்பாக இருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இவ்வாறான அலைகள் கடந்த காலங்களில் கரைப்பகுதிக்கு வந்த போது இருந்த தடுப்புக்கள் சுனாமியால் அழிந்துள்ளதால் கடல் கொந்தளிப்பால் ஏற்படுகின்ற அலைகள் கரையோரப் பிரதேசத்திற்குள் நேரடியாகப்புகும் சூழல் ஏற்பட்டுள்ளது.

இதனால் வாகரைப் பிரதேச மக்கள் கடல்வருகிறது எனக்கூறி ஓட்டமெடுத்தனர். இந்தச்சம்பவம் கல்லடி, திருச்செந்தூர் மக்களிடையேயும் பரவியதையடுத்து அப்பிரதேச மக்கள் உடுத்த உடையுடன் ஓடிச் சென்றுள்ளனர். இந்தச் சமயத்தில் கல்லடிப்பாலப் போக்குவரத்து இரண்டு மணிநேரம் நெரிசல் ஏற்பட்டது.

திருகோணமலையின் வடக்கே 30 கிலோ மீற்றர் தொலைவிலுள்ள சலப்பை ஆற்றுப்பாலம் நேற்று முன் தினம் ஏற்பட்ட கடல் பெருக்கினால் அடித்துச் செல்லப்பட்டுள்ளது.

இச்சம்பவத்தினால் திருகோணமலை, குச்சவெளி, புடைவைக்கட்டு, திரியாய், புல்மோட்டை ஆகிய பகுதிகளுக்கான போக்கு வரத்து ஸ்தம்பிதம் அடைந்துள்ளது. அத்துடன் வாகனப் போக்குவரத்தும் முற்றாகத் தடைப்பட்டுள்ளது.

இச்சம்பவம் நேற்று முன்தினம் சுமார் பி.ப ஒரு மணியளவில் இடம் பெற்றது. கடலின் சீற்றம் காரணமாக எழுந்து வந்த அலையின் வேகத்தால் எண்பது மீற்றர் நீளம் 7.4 மீற்றர் அகலம் கொண்ட இரணைக்கேணி முனைப்பகுதிப்பாலமே இவ்வாறு பாதிக்கப்பட்டுள்ளது. இத்துடன் 20 மீற்றர் நிலப்பகுதியும் கடலினால் அரிக்கப்பட்டுள்ளது. சுனாமித் தாக்கத்தின் போது இவ்வீதி 400மீற்றர் வரை பாதிக்கப்பட்டுள்ளமையும் இங்கு குறிப்பிடத்தக்கது.

# கடந்தகால அனுபவங்களை அடிப்படையாக்கி புனரமைப்புக்களை மேற்கொள்ள வேண்டும்

## -நோர்வே பல்கலை பேராசிரியர் வலியுறுத்து

(மட்டக்களப்பு)

கடற்கோள் அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களில் புனரமைப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளும் போது அரசாங்கம் புனரமைப்புத் தொடர்பாக கடந்தகால அனுபவங்களை அடிப்படையாகக் கொண்டு மேற்கொள்ளவேண்டுமென நோர்வே பல்கலைக்கழகத்தின் விஞ்ஞான தொழில்நுட்ப பேராசிரியர் லோன்ட் தெரிவித்துள்ளார்.

கடந்த காலத்தில் மகாவலித் திட்டத்திற்கமைய ஒரு இலட்சத்து 40ஆயிரம் வீடுகளை அமைத்த அனுபவத்தைக் கொண்டு சிறிலங்கா அரசாங்கம் தற்பொழுது கடல்கோள் அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களில் புனரமைப்பு நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டுமென அவர் குறிப்பிட்டுள்ளார்.

நேற்று முன்தினம் கொழும்பில் நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாடொன்றில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே நோர்வே பல்கலைக் கழகத்தின் விஞ்ஞான தொழில்நுட்ப போராசிரியர் லோன்ட் இவ்வாறு கூறியுள்ளார்.

இயற்கை அனர்த்தத்தினால் ஏற்படும் பாதிப்புக்களைத் தடுக்க முடியாதெனச் சுட்டிக்காட்டியுள்ள லோனட், எனினும் அவ்வாறான இயற்கை அனர்த்தங்களின் பின்னர் மேற்கொள்ளப்படும் புனரமைப்புப் பணிகளை அரசாங்கங்கள் தமது முன் அனுபவங்களைக்கொண்டு மேற்கொள்ள வேண்டுமெனத் தெரிவித்துள்ளார்.



கிளிநொச்சி டிப்போச் சந்தியிலிருந்து மாவீரர் துயிலுமில்லம் நோக்கிச் செல்லும் பிரதான வீதியில் அமைந்துள்ள பிரதான பாலத்தடியில் வீதி மிகவும் ஒடுக்கமாகக் காணப்படுவதுடன் அவ்விடம் மழைநீர் ஓடி அரிக்கப்பட்டு மிகவும் ஆபத்தான நிலையில் காணப்படுவதைப் படத்தில் காணலாம். (படம்-குகன்)

# சோழர் சிறுவர் பூங்காவின் 12ஆம் ஆண்டு நிறைவு விழா

(அலுவலக செய்தியாளர்)

தமிழர் புனர்வாழ்வுக்கழக ஜேர்மன் கிளையின் அனுசரணையுடன் தமிழீழ ஊரகவளர்ச்சிப் பணி நிர்வகிக்கும் சோழர் சிறுவர் பூங்காவின் 12 ஆம் ஆண்டு நிறைவு விழாவும், விளையாட்டு விழாவும் நாளை பூங்கா மைதானததில் நடைபெறவுள்ளது. அன்றைய தினம் பிற்பகல் 2.30 மணிக்கு நடைபெறவுள்ள பூங்கா சிறுவர்களின் நிகழ்வில் அனைவரையும் கலந்து சிறப்பிக்கும் வண்ணம் விழாக்குழுவினர் வேண்டியுள்ளனர். (சோ)

# இரசாயனவியல் பாடத்திற்கு இன்று விசேட செயலமர்வு

க.பொ.த உ/த 2006 கணித, விஞ்ஞானப்பிரிவு மாணவர்களுக்கான இரசாயனவியல் பாடத்திற்கான செயலமர்வு ஆசிரியர் அன்பழகனினால் இன்று ஞாயிறு காலை பத்து மணிக்கு கிளி/மத்தியகல்லூரியில் நடைபெறவுள்ளது. 2006 பரீட்சை எடுக்கும் உரிய மாணவர்கள் அனைவரையும் சமுகம்கொள்ளுமாறு தமிழீழ மாணவர் அமைப்பு கேட்டுக்கொண்டுள்ளது. 2005 பரீட்சை எடுக்கும் மாணவர்களும் பங்குபற்றலாம்.

## ஒப்பந்த ஆங்கிலஆசிரியர்களை வருகை தரக் கோரல்

2000, 2001 ஆம் வருடங்களில் துணுக்காய் கல்வி வலயத்தில் கடமையாற்றிய ஆங்கில ஒப்பந்த ஆசிரியர்கள் எதிர்வரும் முதலாம் திகதி புதன்கிழமை காலை 9.00 மணிக்கு சகல ஆவணங்களுடனும் துணுக்காய் வலயக் கல்வி அலுவலகத்திற்கு வருகை தருமாறு துணுக்காய் வலயக் கல்விப்பணிப்பாளர் கேட்டுக் கொள்கின்றார்.

# முல்லையில் புகழேந்தியின் ஓவியக் கண்காட்சி

(அலுவலக செய்தியாளர்)

ஓவியர் புகழேந்தியின் புயலின் நிறங்கள் ஓவியக் கண்காட்சியும், கருத்துப் பகிர்வும் எதிர்வரும் 31ஆம், முதலாம் திகதிகளில் முல்லை மாவட்டத்தில் நடைபெறவுள்ளது.

எதிர்வரும் 31ஆம் திகதி காலை பத்து மணிக்கு முள்ளியவளை நுண்கலைக்கல்லூரியிலும், யூன் முதலாம் திகதியன்று காலை பத்து மணிக்கு புதுக்குடியிருப்பு நுண்கலைக்கல்லூரியிலும் கண்காட்சி நடை பெறவுள்ளதுடன் மேற்படி இரு இடங்களிலும் மாலை நான்கு மணிக்குக் கருத் துப்பகிர்வும் இடம்பெறவுள்ளது.

முல்லை மாவட்ட நுண்கலைக்கல்லூரியின் ஏற்பாட்டில் இவ் ஓவியக் கண்காட்சியும், கருத்துப் பகிர்வும் இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (சோ)

# தொழில்சார் பயிற்சி நிறைவில் சான்றிதழ் வழங்க ஏற்பாடு

(அலுவலக செய்தியாளர்)

பெண்கள் அபிவிருத்தி புனர்வாழ்வு நிறுவனத்தில் நோர்வே அபிவிருத்தித்திட்ட நிதியுதவியுடன் பெண்கள் தொழிற்பயிற்சி நிறுவனத்தினால் நடாத்தப்பட்ட தொழில்சார் பயிற்சி நிறைவு நிகழ்வும் சான்றிதழ் வழங்கும் வைபவமும் நாளை நடைபெறவுள்ளது.

கிளிநொச்சி யாழ்சாலையில் அமைந்துள்ள பெண்கள் அபிவிருத்தி புனர்வாழ்வு நிறுவன முதன்மைச் செயலகத்தில் அன்றையதினம் காலை 10.00 மணிக்கு நடைபெறவுள்ள மேற்படி நிகழ்வில் அனைவரையும் கலந்து சிறப்பிக்கும் வண்ணம் நிறுவனத்தினர் வேண்டியுள்ளனர். (சோ)

# 'எக்ஸ்' கதிர் இயந்திரம் இயங்கத் தொடங்கியது

(மன்னார்)

நீண்டகாலமாக மன்னார் பொது வைத்தியசாலையில் பழுதுபட்ட நிலையிலிருந்த எக்ஸ்கதிர் இயந்திரம் திருத்தப்பட்டு நோயாளர்களுக்கான சேவை இடம்பெற்று வருகின்றது. இதனால் நோயாளர்கள் வெளியில் கூடிய பணத்தைச் செலவழித்து எக்ஸ்ரே எடுப்பது தவிர்க்கப்பட்டுள்ளது அத்துடன் உடனுக்குடன் நோய்களை இனங்கண்டு உரிய சிகிச்சை செய்யவும் உதவியாகவுள்ளது. (18)

# முல்லை தேசிய எழுச்சிப் பேரவை ஒட்டுசுட்டானில் சங்கமம்

(உடையார்கட்டு)

ஒட்டுசுட்டான் மகாவித்தியாலயத்தில் முல்லை மாவட்ட அனைத்துக் கோட்ட தேசிய எழுச்சிப் பேரவையினருக்குமான சங்கம நிகழ்வு ஒட்டுசுட்டான் பிரதேச அரசியல் துறைப் பொறுப்பாளர் தமிழரசன் தலைமையில் கடந்த வியாழனன்று ஆரம்பமானது.

சங்கம நிகழ்விற்கான பொதுச் சுடரை ஒட்டுசுட்டான் மகாவித்தியாலய அதிபர் பங்கயற்செல்வன் ஏற்ற, தமிழீழ தேசியக் கொடியை முல்லை மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் முகுந்தன் ஏற்றி வைத்தார்.

நிகழ்வில் கருத்துரைகளை பாண்டியன்குள கோட்ட தேசிய எழுச்சிப் பேரவைச் செயலர், ஒட்டுசுட்டான் கோட்டக் கல்வி அதிகாரி, ஒட்டுசுட்டான் மகாவித்தியாலய அதிபர், மாங்குளம் கோட்ட தேசிய எழுச்சிப் பேரவைச் செயலர், முள்ளியவளை கோட்ட தேசிய எழுச்சிப் பேரவைச் செயலர், உடையார்கட்டு கோட்ட தேசிய எழுச்சிப் பேரவை செயலர், தண்டுவான் கோட்ட துணைச் செயலர், முல்லை மாவட்ட ஊடகப் பேச்சாளர் ஆகியோர் வழங்க சிறப்புரையினை முல்லை மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் வழங்கினார்.


இதனைத் தொடர்ந்து தேசிய எழுச்சிப் பேரவையினரால் மேற்கொளளப்பட வேண்டிய வேலைத்திட்ட விடயமாகக் கருத்துக்கள் பகிரப்பட்டன. (19)

# வீதியைப் புனரமைக்கக் கோரி மறியல் போராட்டம்!

(மட்டக்களப்பு)

வீதியைத் திருத்தம் செய்யாது போனால் நற்பிட்டிமுனை வாகன உரிமையாளர் சங்கம் கல்முனை வீதி அபிவிருத்தி அதிகார சபையின் முன்னால் தங்களின் வாகனங்களுடன் மறியல் போராட்டத்தில் ஈடுபட முடிவு செய்துள்ளது.

நற்பிட்டிமுனை பிரதான வீதியில் பாலம் ஒன்றில் ஏற்பட்டுள்ள உடைவு காரணமாகத் தொடர்ந்து அவ்விடத்தில் விபத்துக்கள் ஏற்படுகின்றன. இந்த விடயம் தொடர்பாக வீதி அபிவிருத்தி அதிகார சபைக்குப் பல தடவைகளில் அறிவித்தல் கொடுத்தும் அது பலனளிக்கவில்லை. இது தொடர்பாக பத்திரிகைகள் வாயிலாக அறிவித்தல் கொடுத்தோம். அவற்றினையும் கல்முனை வீதி அபிவிருத்தி அதிகாரசபை உதாசீனம் செய்துவிட்டது. இதன் பிரகாரம் அடுத்த வாரம் நற்பிட்டிமுனை வாகன உரிமையாளர்கள் சங்கம் வீதி அபிவிருத்தி அதிகாரசபை முன்னால் மறியல் போராட்டத்தில் ஈடுபடவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.



கிளிநொச்சி பொதுச்சந்தையில் அமைந்துள்ள மலசலகூடத்திற்குச் செல்லும் நுழைவாயிலில் சுகாதார சீர் கேடான முறையில் கழிவுநீர்த்தேக்கம் கொண்டு நிற்பதனையும், இதனூடாகவே சென்று மக்கள் மலசல கூடத்தினைப் பயன்படுத்த வேண்டிய துர்ப்பாக்கிய நிலைக்குள்ளாகியுள்ளமையினையும் படத்தில் காணலாம். (படம்-சோதி)

# மாணவர் சமூகமே எம் இனத்தின் தூண்கள் அவர்களிடமே பாரியபொறுப்புக்கள்

-தென்மராட்சிக் கோட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர்

(தென்மராட்சி)

**மாணவர் சமூகமே எம் இனத்தின் தூண்கள் அவர்களிடமே ஒரு பாரிய பொறுப்பும் கடமையும் இன்று ஒப்படைக்கப்பட்டுள்ளது என தென்மராட்சி வலய பாடசாலை அதிபர்கள் உயர்வகுப்பு மாணவர்களுடனான சந்திப்பில் தென்மராட்சி கோட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் ஈஸ்வரன் தெரிவித் துள்ளார்.**

எம்முடைய தமிழீழ மண்ணில் மாணவர் சமூகத்திடமே எம் இனத் தின் வளர்ச்சிப்படிகளில் ஒரு பாரிய பொறுப்பும் கடமையும் ஒப்படைக் கப்பட்டுள்ளது. மாணவர்களின் மறு மலர்ச்சியே விடுதலை என்ற விருட் சத்தின் உரமாகவும் எம்முடைய மக்களின் உரிமைகளை மீட்டெ டுக்கும் பலமாகவும் இன்று மாறி யுள்ளது.

இனவாத கொடுமைகளுக்கு எதிராக மாணவர்கள் திரண்டு எழுந்து போராடும் தமிழ் மக்களின் கவசமாக உள்ளனர். கடந்த காலங்களில் இம் மண்ணில் சிங்கள ஆட்சியாளர்களால் நடத்தப்பட்ட கொலைகளுக்கும் கொடுமைகளுக்கும் எதிராக மாண வர்கள் நெருப்புப் பிழம்பாக எழுந்து மலையாக நிமிர்ந்து சிங்கள அரசின் செருக்கையும் திமிரையும் அம்பலப் படுத்திய வரலாறுகள் எண்ணிக்கை யில் அடங்காதவைகள் அத்தகைய அசைக்கமுடியாத சக்தியாக உள்ள எம்முடைய மாணவர்கள் எம் இனத் தின் சொத்துக்கள் என அவர் தனது உரையில்மேலும் தெரிவித்துள்ளார். (28)

# மந்திகை வைத்தியசாலையில் சட்டவைத்திய அதிகாரி இல்லை

-சட்டவைத்திய பணிகள் பாதிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.வடமராட்சியில் உள்ள மந்திகை வைத்தியசாலைக்கென சட்ட வைத்திய அதிகாரி ஒருவர் நியமிக்கப்படாமையால் இவ் வைத்தியசாலையின் சட்டவைத்திய செயற்பாடுகள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளன.

இம் மந்திகை வைத்தியசாலை வடமராட்சி பகுதி வாழ்மக்களுக் கெல்லாம் பிரதானமான ஒரு வைத்தியசாலையாகவுள்ளது. இந்நிலையில் இங்கு சட்டவைத்திய அதிகாரி ஒருவர் நியமிக்கப்படாமையால் சட்ட வைத்திய அதிகாரி மேற்கொள்ள வேண்டிய அனைத்து நடவடிக்கைகளையும் மாவட்ட வைத்திய அதிகாரி ஒருவரே கவனிக்க வேண்டியுள்ளது.

இந் நிலைமையால் மாவட்டவைத்திய அதிகாரி தன் கடமையைக்கூட சரிவர செய்து முடிக்க முடியாது. வேலைப்பளு அதிகமாகக் காணப்படுகிறது.

இதனால் இவ் வைத்திய சாலையின்சட்டவைத்தியத்துறை செயற்பாடுகள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளன. (33)

# வேகக்கட்டுப்பாட்டு முறையைப் பேண யாழ்.பொலிசாரிடம் வேகமானி இல்லை

யாழ்.மாவட்ட பொலிஸ் அத்தியட்சகர்

(யாழ்ப்பாணம்)

ஓடும் வாகனத்தின் வேகத்தை அளக்கப்பயன்படுத்துகின்ற வேக மானி யாழ்.மாவட்டத்திலுள்ள எந்த ஒரு பொலிஸ் நிலையத்திலும் இல்லையென யாழ்.மாவட்ட பொலிஸ் அத்தியட்சகர் தரப்பில் தெரி வித்துள்ளனர்.

வாகனம் ஓடிக் கொண்டிருக்கும் போதே அவ்வாகனத்திற்கு தூரத்தில் நின்று கொண்டே அது செல்லும் வேகத்தை அளக்கக்கூடிய வேகமானி யாழ்.மாவட்டத்திலுள்ள சகல பொலிஸ்நிலையங்களிலும் இருப்பது அவசியம்.

இவ்வேகமானியைப் பயன்படுத் தியே வாகனங்களின் வேகக்கட்டுப் பாட்டு நடைமுறையை இறுக்கமாகக் கடைப்பிடிக்கச் செய்யமுடியும்.

எனினும் இவ் வேகமானியானது யாழ்.மாவட்டத்திலுள்ள எந்த ஒரு பொலிஸ் நிலையங்களிலும் இல்லை இதனால் யாழ்.குடாநாட்டில் வேகக் கட்டுப்பாட்டு முறையை பேணுவதில் சிறிலங்காப் பொலிசார் பலவீன மடைந்திருப்பதாகத் தெரிவித்த யாழ். மாவட்ட பொலிஸ் அத்தியட்சகர் போக்குவரத்துப் பொலிசாரின் பயிற்சித் தேவைகளுக்காக ஒரே ஒரு வேகமானிமட்டும் காங்கேசன் துறை பொலிஸ் பயிற்சித்தலைமை யகத்தில் இருப்பதாகவும் தெரி வித்தார். (33)

# சாவகச்சேரி மருத்துவமனைக்கு கண்டி றோட்டறிக்கழகம் உதவி

(தென்மராட்சி)

கண்டி றோட்டறிக்கழகத்தால் சாவகச்சேரி மருத்துவமனைக்கு சக்கர நாற்காலி, தாா்ப்பாய்கள், மருத்துவ உபகரணங்கள்போன்றவை அன்பளிப்புச் செய்யப் பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

மற்றும் இம் மருத்துவமனை புனரமைப்புத் தொடர்பான வேலைத் திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டிருப்பதாகவும் நிகொட் திட்டத்தின் உதவியுடன் விரைவில் புதிய கட்டடங்கள் கட்டும் பணிகள் முன்னெடுக்கப்படவுள்ள தாகவும் மருத்துவமனை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. (28)

# கோப்பாய் பிரதேசத்திலுள்ள பார்த்தீனியச் செடிகளை அழிக்குக!

யாழ் அரச அதிபர் பணிப்பு

யாழ். கோப்பாய் பிரதேச செய லாளர் பிரிவில் பார்த்தீனிய விஷச்செடி ஒழிப்பு நடவடிக்கை களைத் தீவிரப் படுத்துமாறு யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் கே.கணேஷ் உத்தரவிட்டுள் ளார்.

யாழ்.மாவட்டத்திலேயே கோப் பாய்ப்பிரதேச செயலாளர் பிரிவுக்குட் பட்ட மருதனார் மடம், அச்சுவேலி, நீர்வேலி, ஆவரங்கால், புத்தூர், நவக்கிரி போன்ற பகுதிகளில்தான் அதிகளவில் பார்த்தீனியம் செடி பரம் பலடைந்துள்ளது.

இதற்கு இப்பகுதியிலிருக்கும் விவசாயச் செய்கைகளுக்கு உகந்த மண்வளம் பெரிதும் சாதகமானதாக வுள்ளது. இதனால் இப்பகுதி விவ சாயிகளும் விவசாய நிலங்களும் பாதிப்படைவதுடன் இது பெரும் சூழல் பாதிப்பையும் ஏற்படுத்தி யுள்ளதாக யாழ். மாவட்ட அரச அதிபர். சுட்டிக்காட்டியுள்ளார்.

மேற்படிப் பகுதிகளில் பரவியுள்ள பார்த்தீனியம் விஷச் செடி களை அழிப்பதுடன் எதிர்காலத்தில் அதன் பரம்பலைத் தடுக்க உரிய நடவடிக்கைகளை உடன் எடுக்குமாறு கோப்பாய்ப்பிரதேச செயலாளருக்கு உத்தரவிட்டுள்ளார். (33)

# யாழ்மாவட்டத்தில் மிளகாய் பயிர்களுக்கு "திரிப்ஸ்" நோய்த்தாக்கம் அதிகரிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் மிளகாய்ப் பயிர்களுக்கு "திரிப்ஸ்" என்ற நோயின் தாக்கம் அதிகரித்து வரு வதாக யாழ்.மாவட்ட விவசாய ஆராய்ச்சித் திணைக்களத்தினர் தெரி விக்கின்றனர்.

இந்நோயின் தாக்கத்தால் மிள காய்கள் அழுகிப்போவதுடன் காய்கள் சுருளடைந்து இலைகள் விறைப் படைந்து போகின்றன. இதனால் மிளகாய்ப்பயிர்ச்செய்கையில் எதிர் பார்த்த இலாபத்தை ஈட்ட முடியாது போய்விடுகிறது.

இதனால் விவசாயிகள் பெரும் பொருளாதாரப் பாதிப்புக்களுக்கு உள் ளாகி வருவதாகவும் விவசாய ஆராய்ச்சி நிலையத்தினர் தெரிவிக் கின்றனர்.

"திரிப்ஸ்" என்ற ஒருவகை பூச்சி இனத்தினால் ஏற்படுத்தப்படும் இந் நோயானது தற்போது நிலவும் கடும் வெப்பகால நிலையில் அதிக தாக்கத் தை ஏற்படுத்தி வருவதாகவும் விவசாய ஆராய்ச்சிநிலையத்தினர் தெரிவிக்கின்றனர். (33)

# முன்பள்ளி கல்வி மேம்பாட்டு நிலைய வலயச் செயலகம் தென்மராட்சியில் திறப்பு

(தென்மராட்சி)

தென்மராட்சிப் பிரதேசத்தில் முன்பள்ளி கல்விமேம்பாட்டு நிலைய வலயச் செயலகம் சங்கத்தானை ஆசிரியர் வீதியில் திறந்து வைக்கப்பட்டது.

முன்பள்ளி கல்வி மேம்பாட்டுத் தலைவர் சு.பாக்கியராஜாவின் தலைமை யில் பிரதேசசபை செயலாளர் பாலச்சந்திரன் நாடாவைவெட்டி அலுவலகத்தை சம்பிரதாயபூர்வமாக திறந்து வைத்தார். அலுவலகத்தின் பெயர்ப்பலகையினை வடக்கு கிழக்கு முன்பள்ளி கல்வி மேம்பாட்டு ஒருங் கிணைப்பாளர் க.கணேசலிங்கம் திரைநீக்கம் செய்து வைத்தார்.

இந்நிகழ்வில் அபிவிருத்தி பிரிவுப் பணிப்பாளர்கள், ஒருங்கிணைப்பாளர்கள் உட்படப் பலர் கலந்து கொண்டனர். (28)

# இயந்திரப் பொறிமுறை இயக்கமற்ற வாகனங்களை தடைசெய்ய யாழ்.மாவட்டச் செயலகம் நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

சிறந்த இயந்திரப் பொறிமுறை இயக்கம் இன்றிக்காணப்படும் மோட் டார் வாகனங்களின் பயன்பாட்டை யாழ்.குடாநாட்டில் தடைசெய்ய யாழ். மாவட்டச் செயலகத்தால் நடவடிக் கை எடுக்கப்படவுள்ளது.

சிறந்த இயந்திரப்பொறிமுறை இயக்கம் இன்றிய வாகனங்கள் தொடர்ந்தும் பயன்படுத்தப்பட்டு வருவதால் யாழ்.குடாநாட்டில் விபத்து கள் அதிகரித்துள்ளன.

அத்துடன் இவ்வாறான வாகனங் களிலிருந்து வெளியேறும் புகை பெரிதும் சூழலை மாசுபடுத்துவதாகக் காணப்படுகிறது.

இவற்றைக்கவனத்தில் கொண்டு சிறந்த இயந்திரப்பொறிமுறை இயக் கம் இல்லாத மோட்டார் வாகனங்க ளைப் பாவனையில் இருந்து விலக் கிக்கொள்ளவும் அவ்வாறான வாக னங்களை தொடர்ந்தும் பயன்படுத்து வோர் மீது சட்டப்படி நடவடிக்கை எடுப்பதுடன் இதனை ஒரு சட்டமாக யாழ்.மாவட்டத்தில் கடைப் பிடிக்கவும் யாழ்.மாவட்ட செயலகத்தால் நடவ டிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (33)

# மின்கம்பங்கள் வந்து ஒன்றரை வருடங்கள் மின்விநியோகம் இன்னுமில்லை

-புங்குடுதீவு மக்கள் விசனம்

(தீவகம்)

புங்குடுதீவுக்கு மின் விநியோகத்தை உடன் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்குமாறு அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். கடந்த இருபது வருடங்களாக மின்சாரம் இன்றியுள்ள புங்குடுதீவுக்கு மின்சாரம் வழங்குவதற்கு இலங்கை மின்சாரசபையினால் கடந்த ஒன்றரை வருடங்களுக்கு முன் நூற்றிக்கும் மேற்பட்ட மின்சாரக் கம்பங்கள் வைக்கப்பட்டுள்ள நிலையிலும் இதுவரை ஒரு கம்பமும் நடப்படவில்லை.

எண்பத்தியேழு கிடங்குகள் தோண்டப்பட்ட நிலையில் அக்கிடங்குகளும் மின்சாரக் கம்பங்கள் நடப்படாததால் தூர்ந்துவிட்டதாகவும் 2050 குடும்பங் களைச் சேர்ந்த 5500இற்கும் மேற்பட்ட மக்கள் வசித்துவரும் இப்பகுதியில் மின்சாரம் வழங்கப்படாமையால் இப்பிரதேசத்தின் வளர்ச்சி பாதிக்கப்படுவதா கவும் இப்பகுதிக்கு மின்சாரம் வழங்க நடவடிக்கையெடுக்க சம்பந்தப்பட்ட வர்கள் இதில் தீவிர கவனம்செலுத்தும் படியும் கேட்கப்பட்டுள்ளது. (28)

# சுகாதார சீர்கேட்டைத் தடுக்காதது குறித்து ம.உ.ஆணைக்குழுவிடம் மக்கள் புகார்

(யாழ்ப்பாணம்)

யாழ்.நகரிலுள்ள புகையிரத நிலையத்தை அண்டியுள்ள பகுதி களில் தொடர்ந்தும் கழிவுகள் கொட் டப்பட்டு வருகின்றமைக்கு அப்பகுதி மக்கள் கடும் எதிர்ப்பினைத் தெரி வித்துள்ளனர்.

மேற்படி பகுதிகளில் நகரக் கழிவுகளும், மாமிசக்கழிவுகளும் அண்மைக்காலமாகக் கொட்டப்பட்டு வருகின்றன. இதனால் அப்பகுதியில் பெரும் சுகாதாரப்பிரச்சினைகள் தோன் றியுள்ளன. எனினும் இதனைக் கருத்திலெடுத்து சம்பந்தப்பட்ட தரப்பினர் உரிய நடவடிக்கைகளை எடுக்காமைக்கு கடுமையான எதிர்ப் பினைத் தெரிவித்துள்ள அப்பகுதி மக்கள் நகரத்தின் சுகாதாரத்தைப் பேணவேண்டியவர்கள் இது குறித் துக் கவனத்தில் எடுக்காது இருக்கின் றமைக்கு எதிராக இலங்கை மனித உரிமைகள் ஆணைக் குழுவினிடம் நேற்று முன்தினம் அப்பகுதி மக்க ளின் கையெழுத் துக்கள் அடங்கிய மகஜர் ஒன்றையும் கையளித்துள்ள தாகத் தெரிவித்துள்ளனர். (33)

# வீட்டுக்குத் தீவைத்த விசமிகள்

வீட்டில் ஆட்கள் இல்லாத வேளை விசமிகளால் கட்டப்பிராயில் வீடொன்று தீயிட்டுக் கொழுத்தப்பட்டுள்ளது.சந்திரகுமார் என்பவரது வீடே தீயிட்டுக் கொழுத்தப்பட்டுள்ளது. இச் சம்பவம் குறித்து வீட்டு உரிமையாளர் பொலிசாரிடம் முறைப்பாடு செய்துள்ளார். இச் சம்பவம் குறித்து சந்தேகநபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார். (சு)


# எவ்வளவு காலத்திற்கு இழுத்தடிப்பு?

சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க பொதுக் கட்டமைப்புத் தொடர்பாக என்ன நடவடிக்கை எடுக்கப்போகிறார்? என்பது தொடர்பில் கடந்த இருவாரங்களாக பல்வேறு ஊகச் செய்திகளும் அடுக்கடுக்காக வந்து கொண்டிருக்கின்றன.

அதன் பெயர் மாற்றம் குறித்தும் செய்திகள் வெளிவந்தன.

கண்டியில் சுமார் இருவாரங்களுக்கு முன்னர் இடம் பெற்ற உதவி வழங்கும் நாடுகளின் மாநாட்டிலும் அதேதினம் சிறிலங்காவின் தேசிய தொலைக்காட்சியிலும் அவர் ஆற்றிய உரையை அடிப்படையாகக் கொண்டே இவ்வாறான செய்திகள் வெளியாகிக் கொண்டிருக்கின்றன.

உதவி வழங்கும் நாடுகளின் மாநாட்டில் அவர் பொதுக்கட்டமைப்புத் தொடர்பாக அறிவிப்பார் என்ற ஊகம் முதலில் வெளியிடப் பட்டது. ஆனால் அம் மாநாட்டிற்கு இரண்



டொரு தினங்களுக்கு முன் அவர் இரண்டு வார கால அவகாசம் கோருவதாகத் தெரிவிக் கப்பட்டது. அந்தக் கால அவகாசமும் முடிவடைந்து விட்டது.

இந்த அவகாசம் கோரும் செயல் உதவி வழங்கும் நாடுகளை ஏமாற்றி நிதி உதவியைப் பெற்று விட எடுக்கும் முயற்சிதான் என்பதை புலிகள் முன்னரே வெளியிட்டனர். அது சரியாகி விட்டது.

பின்னர் ஜே.வி.பி.யின் இணக்கப்பாடின்றி பொதுக்கட்டமைப்பை உருவாக்கப் போவதில்லை எனத் தெரிவிக்கப்பட்டது. உண்மையில் ஜே.வி.பி.யின் இணக்கமின்றி பொதுக் கட்டமைப்பைச் சந்திரிகாவினால் உருவாக்க முடியாது என்பதே சரியானதாகும். அதாவது அவர் பாராளுமன்றத்தைப்பறி கொடுத்து இவ்வாறான கட்டமைப்பை உருவாக்கும் மனோபாவம் கொண்டவரல்ல.

பொதுக்கட்டமைப்பை உருவாக்குவது தொடர்பில் அவரது அங்கலாய்ப்பு சுனாமியால் பாதிக்கப்பட்டவர்களுக்கு வழங்கப்படும் நிதியைப் பெற்று அரசாங்கத்திற்கு ஏற்பட்டுள்ள நெருக்கடியைப் போக்குவதும் யுத்தத்திற்கான தயாரிப்பில் ஈடுபடுவதுமாகும்.

அவர் அது தொடர்பில் ஆற்றிய தொலைக்காட்சி உரையில் சுனாமியால் பாதிக்கப்பட்டோரின் புனரமைப்புக்கும் யுத்தத்திற்கும் தேவையான நிதியை வேறு வழிகளில் பெற்றுத்தர பொதுக்கட்டமைப்பை எதிர்ப்போர் தயாரா? எனக் கேள்வியெழுப்பினர் இதன் அர்த்தம் யுத்தத்திற்கான நிதிகள் அவருக்குக் கிடைக்குமாக இருந்தால் மீண்டும் ஒரு பாரிய யுத்தத்திற்குத் தலைமை தாங்க அவர் தயார் என்பதாகும்.

*1994* இல் சனாதிபதியாக அவர் தேர்ந்தெடுக்கப்பட்டவுடன் ஐ.தே.க யுத்தம் நடத்திய முறை தவறானது என்பதே அவரதும் அவரைச் சூழ்ந்திருந்த புத்திஜீவிகள் அமைச்சரவையினதும் கருத்தாக இருந்தது. அதாவது சிறிய அளவில் நிதியைப் பாதுகாப்புக்கு ஒதுக்கி சிறிய சிறிய இராணுவ நடவடிக்கைகளை மேற்கொள்வதிலும் பார்க்க பாரிய நிதி ஒதுக்கீட்டில் பெரும் இராணுவ நடவடிக்கைகளை முன்னெடுப்பதன் மூலம் புலிகளை ஒடுக்கி தமிழ் மக்களின் விடுதலைப் போராட்டத்தை அழித்துவிடலாம் என்பது அவர்களின் கருத்தாக இருந்தது.

பாரிய இராணுவ நடவடிக்கை மூலம் யாழ்ப்பாணம்- போராட்டத்தின் தலை அது தான் என்பது அவர்களின் கருத்து- அதனை நசுக்கி விட்டால் போராட்டம் அழிந்து விடும் என அவர்கள் எண்ணினர். ஆனால் நடந்தது என்ன என்பது அனைவருக்கும் தெரியும்.

இன்றும் கூட வேறுவழியின்றியே சமாதான நடவடிக்கைகளில் அவர் ஈடுபட்டிருக்கிறார் என்பதை அவர் அடிக்கடி வெளிப்படுத்தி வருகின்றார். எனவே இன்று உதவி வழங்கும் நாடுகள் நிபந்தனை எதுவுமின்றி நிதிகளை வழங்குமாயிருந்தால் யுத்தத்தை ஆரம் பிப்பதற்கு நீண்ட நாட்கள் பிடிக்காது.

இதே நிலைப்பாட்டில் தான் ஜே.வி.பி. இருக்கின்றது. அண்மையில் சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க ஆற்றிய தொலைக்காட்சி உரைக்கு பதிலளிக்க ஜே.வி.பி. தொலைக் காட்சியில் இடம் கோருகின்றது. உண்மையில் சந்திரிகாவின் உரையில் ஜே.வி.பி.க்கு முக்கியமாகப் பதிலளிக்க வேண்டிய பகுதியொன்று இருக்குமானால் அது பிள்ளைகளை யுத்தத்தில் இணைக்கத்தயாரா? யுத்தத்திற்கு நிதி பெற்றுத்தரத்தயாரா?என்ற கேள்விகளுக்குத்தான். ஏனெனில் ஜே.வி.பி இப் பொழுது போடும் கோஷங்கள் செயற்பாடுகள் அனைத்தும் யுத்தத்தை நோக்கியதே.

சமாதான நடவடிக்கைகளுக்கு அது போடும் முட்டுக்கட்டைகளும் [illegible]ன் தேசப் பற்றுக்கோஷமும் யுத்த நிறுத்தத்திற்கு எதிரான நடவடிக்கைகளும் அது எதனை விரும்புகிறது எனக் காட்டுகிறது.

சனாதிபதி சந்திரிகா முன்னர் கூறியது போலவே தமிழ் மக்களுக்கு சில சலுகைகளும் புலிகளுக்கு யுத்தமும் என்ற அடிப் படையில் தான் அதன் இப்போதைய கூப் பாடுகள் அமைகின்றன. ஆனால் புலிகளுக்கு மட்டுமல்ல தமிழ் மக்களுக்கும் யுத்தத்தின் மூலம் முடிவு கட்டுவதே ஜே.வி.பி.யின் முழுமையான எண்ணமாகும்.

இந்நிலையில் யுத்தம் தொடர்பில் சனாதிபதி சந்திரிகா விடுத்த சவாலுக்கு பதிலளிக்காவிட்டால் ஜே.வி.பி.க்கு அதன் அபிமானிகளிடத்தில் உள்ள மதிப்பும் கௌரவமும் பாதிக்கப்பட்டுவிடக் கூடிய அபாயம் உள்ளது. ஆனால் அதனை வழமையான பொது மேடைகளில் கத்தித் தீர்த்துவிடவும் முடியாது அத்துடன் அச்சவாலுக்குப் பதில் கூறிவிடுவதும் இலகுவல்ல.

ஆனால் ஜே.வி.பி இன்று சனாபதிபதி சந்திரிகா *1994* இல் யுத்தம் குறித்துக் கொண்டிருந்த நிலைப்பாட்டில் இருக்கின்றது. அதாவது கடந்த *25* வருடங்களுக்கும் மேலாக யுத்தத்தை நடத்திய இருகட்சிகளும் அதனைச் சரிவர நடத்தவில்லை என்பதே அதன் இன்றைய கருத்தாகும்.

அன்று யுத்தத்திற்கு ஒதுக்கப்பட்ட நிதியில் பெருமளவை யுத்தம் நடத்தியோர் அபகரித்து விட்டனர் என சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க குற்றம் சாட்டினார். இன்று ஜே.வி.பி. அக்குற்றச் சாட்டை இரு கட்சிகள் மீதும் வைக்கக்கூடும்.

இதேவேளை ஜே.வி.பி. தனது "புரட்சி" அனுபவங்களைக் கொண்டு புதிய உத்திகளை முன்வைக்கவும் கூடும்.

எனவே ஜே.வி.பி. தொலைக்காட்சிப் பேட்டியில் நாட்டின் தலைமைத்துவத்தைத் தங்களிடம் வழங்கினால் அனைத்தையும் செய்து காட்டுவதாக கூறவே அவ்வாறான



பேட்டியொன்றுக்கு நேரம் கோருகின்றது.

இந் நிலையில் சனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவின் நிலை இன்றுமிகவும் சங் கடமானதுதான். அதாவது ஆட்சியில் தொடரும் அதேவேளை அவரது பதவிக்காலம் குறைந்தது 6 மாதங்கள் கூடியது 18 மாதங்கள் இருக்கின்றன. அவர் *1999* டிசம்பரில் பதவியேற்றதை கணக்கில் கொள்வாராயின் இன்னமும் ஆறு மாதங்களில் அவரின் பதவிக்காலம் முடிவடைந்து விடும். பின்னர் அடுத்த ஆண்டில் இரகசியமாகப் பதவிப் பிரமாணம் செய்ததை எடுத்துக் கொண்டால் *18* மாதங்கள் பதவியில் அவர் இருக்க முடியும்.

அடுத்த சனாதிபதித் தேர்தலுக்கான வேட்பாளரைத் தெரிவு செய்ததுடன் தேர்தல் பிரச்சாரங்களையும். ஐ.தே.க.ஆரம்பித்து விட்டது. ஆனால் சு.க இன்னமும் ஆரம்பிக்க வேயில்லை இதனிலும் பல முட்டுக்கட்டைகள் உள்ளன. இது ஆறு மாதங்களில் பதவிக் காலம் முடிவுக்குவருமா என்ற கேள்வியை எழுப்புகிறது.

எவ்வாறாயினும் இன்று காணப்படும் அரசியல் பொருளாதாரத் தேக்கநிலையை சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க நிச்சயம் விரும்பமாட்டார் ஏனெனில் அவர்முன் அவரது அரசியல் எதிர்காலம், கட்சியின் அரசியல் எதிர்காலம் என்பன கேள்விக்குறியாக நிற் கின்றன.

இதற்கு அரசியலமைப்பு மாற்றம் விரைவாகத் தேவைப்படுகிறது. நிறைவேற்று அதிகாரம் கொண்ட சனாதிபதிமுறை மாற்றம் அல்லது இரண்டு தடவைகள் மட்டுமே போட்டியிடலாம் என்ற வரன்முறையில் மாற்றம் அவருக்கு தேவைப்படுகிறது. மற்றது விகிதாசாரப் பிரதிநிதித்துவ தேர்தல் முறையை மாற்றுவது.

இவற்றை அவரால் செய்ய முடிகின்றதோ இல்லையோ ஆகக்கூடியது ஒன்றரை வருடங்களில் தேர்தலை எதிர் கொள்ள வேண்டியுள்ளதால் கட்சியின் எதிர்காலம் குறித்தும் அவர் கவலை கொள்ள வேண்டியுள்ளது.

இதற்கு முட்டுக்கட்டையாக விருப்பது பொதுக்கட்டமைப்பு. இதனை அமைக்க அவர் மனதார விருப்பம் கொண்டிருக்கவில்லை. அதனை அமைப்பதாகக் கூறிக்கொண்டே காலம் கடத்தி உதவி வழங்கும் நாடுகளிடமிருந்து நிதியைப் பெற்றுவிடும் முயற்சியிலேயே அவர் ஈடுபடக்கூடும்.

அதாவது பொதுக்கட்டமைப்பு விடயத்தில் ஜே.வி.பி இணங்காவிடினும் ஏனைய பொருளாதார கொள்கை விடயத்தில் ஜே.வி.பியை வழிக்குக் கொண்டுவர அவருக்கு கால அவகாசம் தேவைப்படுகிறது.ஜே.வி.பி தற்போது கடைப்பிடிக்கும் பொருளாதாரக் கொள்கை காலத்திற்கு உகந்ததல்ல என்ற விமர்சனம் இப்போது நிதிஅமைச்சரால் முன்வைக்கப்படுகின்றது.

இதன்அடிப்படையில் சில "அனுபவங்கள், பயிற்சிகளை " ஜே.வி.பியின் தலைமைப்பீடம் ஜப்பானில் பெற்றுக்கொள்ளக் கூடும்.

அந்த வழியில் சென்று ஏனையவிடயங்களில் ஜே.வி.பியை சமரசப்படுத்தி நிதியுதவிகளையும் பெற்றுக் கொள் முடியுமானால்

**வேலவன்**

பொதுக்கட்டமைப்பு குறித்த பரபரப்புச் செய்திகள் காணாமல் போகும் நிலையே ஏற்படும். இங்கும் சிக்கல் கள் இருக்கிறது. ஜே.வி.பியும் சிறிலங்கா சுதந்திரக் கட்சியும் கூட்டு வைத்துக்கொண் டது. " நாட்டின்" நன்மைக்காகவோ அல்லது ஒன்றையொன்று வளர்த்து விடவோ அல்ல. ஒன்றையொன்று விழுங்கும் முயற்சியாகவே. இந்த இழுபறிப் போட்டியில் சிக்கி மிகவும் பாதிக்கப்படப் போகிறவர்கள் சிறிலங்கா மக்களே.

## மேல் மாகாண முதலமைச்சருக்கு எதிராக ஜூலை-20 இல் நம்பிக்கையில்லாப் பிரேரணை

### -சட்டமா அதிபரின் ஆலோசனைப்படி விவாதம்

(கொழும்பு)

மேல் மாகாண சபையின் முதலமைச்சர் ரெஜினொல்ட் கூரேக்கு எதிரான நம்பிக்கையில்லா பிரேரணை தொடர்பிலான விவாதம் எதிர்வரும் ஜூலை 20 ஆம் திகதி நடத்தப்படுமென நேற்று கூடிய மேல் மாகாண சபையின் நடவடிக்கை குழு தீர்மானித்துள்ளது. ஜே. வி. பி.யின் ஆதரவுடன் ஐக்கிய தேசியக் கட்சி சமர்ப்பித்துள்ள இந்த பிரேரணை விவாதத்திற்கு வ[illegible] வேளையிலேயே கடந்த மூன்று கிழமைகளுக்கு முன்னர் ஆளுநர் மாகாண சபை [illegible]களை ஒத்திவைத்து இந்தக் குற்றச்சாட்டு தொடர்பில் விசாரணை செய்ய குழு ஒன்றைத் [illegible]தார் இந்தக்குழு நேற்று முன்தினம் சனாதிபதி விசாரணைக் குழுவாக மாற்றப்பட்டது [illegible]நிலை யில் சட்டமா அதிபரின் ஆலோசனைப்படி விவாதம் ஜூலை 20 ஆம் திகதி [illegible]ப்பட தீர்மானிக்கப்பட்டுள்ளது. (32)

## எஸ்.பி. திஸாநாயக்க உயர் நீதிமன்றில் மேன்முறையீடு

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சியின் முன்னாள் அமைச்சர் எஸ் பி. திஸாநாயக்க சார்பில் மீண்டும் உயர் நீதிமன்றத்தில் மேன்முறையீடு செய்யப்படவுள்ளது. நீதிமன்றத்தை அவமதித்த குற்றச்சாட்டின் பேரில் எஸ் பி திஸாநாயக்கவுக்கு உயர் நீதிமன்றம் 2 வருட கடூழிய சிறைத்தண்டனையை விதித்தது. இதனையடுத்து அவரின் நுவரெலிய தொகுதி பாராளுமன்ற உறுப்புரிமைக்கும் ஆபத்து ஏற்பட்டுள்ளது. இந்த நிலையில் தமது பாராளுமன்ற உறுப்புரிமையை இரத்துச்செய்வதற்கு எதிராக தடை உத்தரவை வழங்க வேண்டும் எனக் கோரி எஸ். பி. திஸாநாயக்க மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் மனுத்தாக்கல் செய்திருந்தார்.இந்த மனு வியாழக்கிழமை நிராகரிக்கப்பட்டது. எனவே மீண்டும் அவரின் பாராளுமன்ற உறுப்புரிமைக்கு ஆபத்து ஏற்பட்டுள்ளது இதனையடுத்து தமது மேன்முறையீட்டை உயர் நீதி மன்றத்திலேயே தாக்கல் செய்ய எஸ். பி. திஸா நாயக்கவின் சார்பிலான சட்டத்தரணிகள் தீர்மானித்துள்ளனர். இதன் அடிப்படையில் அந்த மனு நாளை திங்கட்கிழமை தாக்கல் செய்யப்படவுள்ளது.

# வரலாறு வழிகாட்டுகிறது................

**ஜூன் 26 ஆம் திகதி தொடக்கம் ஜூலை 02 ஆம்திகதி வரை கனடாவில் "தமிழ்வாரம்" கடைப்பிடிப்பதற்கான ஏற்பாடுகளை புலம்பெயர்ந்து வாழும் தமிழ்மக்கள் ஏற்பாடு செய்துள்ளனர். இது தொடர்பாக கனடாவிலிருந்து கிடைக்கப்பெற்ற ஆக்கம்.**

உலகில் வாழும் பல்வேறு இனங்களும் தத்தம் தாயக மண்ணை விட்டுப் புலம்பெயர்ந்து வெவ்வேறு நாடுகளில் வாழ்கின்றன என்பது வரலாறாகும். இவ்வாறு புலம்பெயர்ந்த இனங்களிற் சில தாம் குடியேறிய நாடுகளை ஆக்கிரமித்து, அடிமைப் படுத்தித் தமது அரசுகளை நிறுவி ஆட்சிசெய்தன.

ஆட்சி அதிகாரத்தின் மூலம் தத்தம் மொழி, கலை, பண்பாட்டை அந்நாட்டு மக்களிடையே புகுத்தி, அவற்றை உயர்ந்ததாக்கித் தமது இனத்திற்குப் பெருமை சேர்த்தனர். தம்மினமே உயர்ந்த இனம் என்னும் தோற்றத்தையும் உருவாக்கிக் கொண்டனர்.

இந்த வகையில் குறிப்பிடத்தக்கோர் ஐரோப்பியர் ஆவர். இவர்களில் ஆங்கிலேயர், பிரஞ்சுக்காரர், இசுப்பானியர், போர்த்துக்கேயர், ஒல்லாந்தர் ஆகியோரைச் சிறப்பாகக் கூறலாம். மிகச்சிறிய தொகையிற் சென்ற இவ்வினத்தினர் மிகப் பெரும்பான்மையாக வாழ்ந்த அவ்வவ் நாட்டு மக்களைத் தத்தம் மொழிவழி ஆட்சிசெய்தனர்.

தாம் அடிமை கொண்ட நாடுகளின் செல்வங்களைச் சுரண்டித் தம்மையும் தமது நாட்டையும் வளமாக்கிக்கொண்டனர். தமது வாழ்க்கை முறை, ஆட்சிமுறை, நீதிமுறை ஆகியவற்றை அந்நாடுகளிற் புகுத்திப் பெரும் பண்பாட்டுப்படையெடுப்பையே நிகழ்த்தி விட்டனர். இதன் விளைவாக இவர்களது ஆட்சியிலிருந்து விடுபட்ட பின்னரும் அடிமைப்பட்ட நாடுகளால் இன்றுவரை நிமிர்ந்து நிற்க முடியவில்லை.

புலம்பெயர்ந்து வாழ்ந்துவரும் வேறு சில இனங்கள் தத்தம் மொழி, கலை, பண்பாட்டைப் பாதுகாத்துத் தமது அடையாளங்களை இழக்காது தமது தனித்துவத்தைப் பேணிக்காக்கும் அதேவேளையில், சமூகப் பொருளாதாரத் துறைகளிலும் மேம்பட்டும் வாழ்கின்றன. இவை தமது பண்பாட்டுச் சிறப்பின் மூலமும், தத்தம் தாய்நாட்டுச் சிறப்பியல்புகள் மூலமும் பிற இனங்களால் மதிக்கத்தக்க இனங்களாக வாழ்ந்து வருகின்றன. இவ்வாறான இனங்களிற் குறிப்பாகச் சீனர், ஜப்பானியர், யூதர், இத்தாலியர், கிரேக்கர் ஆகியோரைக் கூறலாம். இவற்றுள் சீனா, ஜப்பான் ஆகிய இருநாடுகளும் ஐரோப்பிய ஆக்கிரமிப்புக்குச் சிறிதளவேனும் இடம் அளிக்காது வாழ்ந்த பெருமைக்குரியன.

யூத இனம் தமக்கென ஒரு நாட்டை ஐம்பது ஆண்டுகளுக்கு முன்னர் கொண்டிருக்கவில்லை, எனினும் அவ்வினம் கடந்த 2500 ஆண்டுகளாகத் தமது தனித்துவத்தைப் பேணியதன் மூலம் பெருமைக்குரிய இனமாகத் திகழ்ந்து வருகிறது.

மேற்கூறிய இரு தொகுதி இனங்களும் உலகில் பிற இனங்களால் மதிக்கத்தக்க இனங்களாகத் தத்தம் அடையாளங்களை இழக்காது கட்டொருமைப் பாட்டோடு வாழ்ந்து வருகின்றன. மேலும், உலகின் கலை, பண்பாடு, அறிவியல், தொழில்நுட்பம் அன்ன பிற துறைகளின் மேம்பாட்டிற்கு உதவிப் பிற இனங்களால் போற்றுதற்குரியனவாகவும் விளங்குகின்றன.

அடுத்துப் புலம்பெயர்ந்த இனக்குழுக்களில் ஒன்றான ஆபிரிக்க மக்களை எடுத்து நோக்கில் பல்வேறு ஆபிரிக்க நாடுகளும் ஐரோப்பியர்களால் அடிமை கொள்ளப்பட்ட காலத்தே, ஆபிரிக்க மக்கள் பல்வேறு நாடுகளுக்கு அடிமைகளாக அல்லது கூலிகளாகப் புலம்பெயர்த்தப்பட்டனர்.

சில ஆபிரிக்க இனங்கள் சொந்த நாட்டிலேயே தமது மொழியை இழந்தன. சில இனங்களின் மொழி வளர்ச்சி குன்றியது. தமது அடையாளத்தைத் தொலைக்கும் அளவுக்குத் தம்மை ஆண்ட இனங்களின் மொழி, பண்பாட்டை உள்வாங்கிக் கொண்டன.

அடுத்ததாகத் தமிழினத்தை எடுத்து நோக்கினால் கிறிஸ்துவுக்கு மூற்பட்ட காலம் தொடக்கம் அயல் நாடுகளோடு வணிகத்தொடர்பு கொண்ட இனமாக இருந்திருக்கிறது. தமிழர் வணிக நோக்கோடு கிழக்காசியா மற்றும் மேற்காசிய நாடுகளுக்குச் சென்று வந்தனர். எந்த நாட்டிலும் குடியேறி வாழ முயற்சிக்கவில்லை.

9-ஆம், 10-ஆம் நூற்றாண்டுகளில் சோழப்பேரரசின் எழுச்சியோடு பல கிழக்காசிய நாடுகளிற் தமிழர் செல்வாக்குப் பெற்றனர். பல நாடுகள் சோழப் பேரரசின் ஆளுமையின் கீழ் வந்தன. இருப்பினும் ஐரோப்பிய இனங்களைப் போன்று இந்நாடுகளை ஆக்கிரமித்து ஆட்சி செய்யவில்லை என்பதுவும் தமது மொழி, கலை, பண்பாடுகளை வலிந்து புகுத்தவில்லை என்பதுவும் நோக்கத்தக்கது. இந்நாடுகளில் இன்றும் தமிழர் மொழி, கலை, பண்பாட்டு விழுமியங்களைக் காணக் கூடியதாக உள்ளது.

தமிழர் நாகரிகமானது உலகிற் தோன்றிய தொல் நாகரிகங்களுள் ஒன்றாகும். "உலகில் இதுவரை 23 நாகரிகங்கள் அரும்பி, மலர்ந்து, மணம்பரப்பியுள்ளன. அவற்றுள் 21 நாகரிகங்கள் காலத்தின் கொடுமையால் வாடிவதங்கி உலர்ந்து உதிர்ந்து விட்டன. இரண்டு நாகரிகங்கள் மட்டுமே நிலைத்து நிற்கின்றன. இவற்றுள் ஒன்று சீன நாகரிகம் மற்றையது தமிழர் நாகரிகம் ஆகும்." இது வரலாற்றுப் பேராசிரியர் யே. ஏ. தாயின்பி அவர்களது (Dr. J.A Toynbee) துணிவாகும்.

13-ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் அராபியரிடமும் 16-ஆம் நூற்றாண்டில் ஐரோப்பியரிடமும் ஆட்சிஉரிமையை இழந்த தமிழினம் தன்சொந்த நாட்டில் வாழும் வழி அற்றுப் பொருளாதாரத்தில் வீழ்ச்சியுற்றுக் கூலிகளாகப் புலம்பெயர்ந்து ஆங்கில, பிரஞ்சுக் குடியேற்ற நாடுகளிற் குடி புகுந்தனர்.

இவர்கள் குடியேறிய இடங்களிற் குறிப்பாகச் சிங்கப்பூர், மலேசியா, பர்மா, பிஜி, மொரீசியசு, சீசெல்சு, ரியூனியன், தென்னாபிரிக்கா, கரிபியன் தீவுகள் என்பவற்றை எடுத்து நோக்குவோம்.

சிங்கப்பூர், மலேசியா, பர்மா போன்ற நாடுகளில் குடியேறிய தமிழர் அந்நாடுகள் விடுதலைபெற முன்பிருந்தே தமிழ் மொழியைத் தம்வழித்தோன்றல்கள் மறவாதிருக்க வழிதேடினர். குடியேறிய நாடுகளில் தமிழ் கற்பிக்க முயன்றனர். மலேசியாவில் 1816-ஆம் ஆண்டில் முதலாவது தமிழ்ப்பள்ளி தொடங்கியது. ஆர்வமின்மையால் சில ஆண்டுகளில் இது மூடப்பட்டது. மீண்டும் 1834-இல் தொடங்கி ஐந்து ஆண்டுகளில் மூடப்பட்டது. 1875 முதல் தமிழ்ப் பள்ளி தொடர்ந்து நடைபெற்றது. இதேபோன்ற நிலையே சிங்கப்பூரிலும் நிலவியது. பர்மாவில் தமிழினம் தனித்துவமாக மொழியை இழக்காமல் மொழிக் கல்வியோடு இருந்தது.

பிஜி நாட்டிற்கு 1880-ஆம் ஆண்டளவில் சென்ற தமிழர், தமிழ் மொழியை வளர்த்துத் தமது அடையாளத்தைக் காத்துக் கொள்ளப் பாடுபட்டனர். 1940-ஆம் ஆண்டளவில் அங்கு ஓர் இலட்சம் தமிழர் வாழ்ந்தனர். இந்தியா சுதந்திரம் அடைந்ததும் "நாம் இந்தியர்" என்ற உணர்வு மேலோங்கப்பெற்றதாலும் வீட்டு மொழியாக இந்தி மொழியைப் பயன்படுத்தியதாலும் கலப்பு மணத்தினாலும் தமிழர் அடையாளம் இழந்து விட்டனர். 1985-ஆம் ஆண்டின் பின்பு தமிழ்மொழி கற்க அரசு வசதி செய்து கொடுத்ததனால் இன்று மறுமலர்ச்சி ஏற்பட்டுள்ளது. மொரீசியசிலும் ஓரளவு இதே நிலையே காணப்படுகின்றது.

ரியூனியன் தீவில் இன்று இரண்டு இலட்சம் தமிழர் வசிக்கின்றனர். இவர்கள் இருநூறு ஆண்டுகளுக்கு முன்னர் சென்று குடியேறியோர். இவர்களில் 95 விழுக்காட்டிற்கு மேற்பட்டோர் தமிழ் மொழியை மறந்து விட்டனர். இன்று பல்கலைக்கழகங்களில் தமிழ்மொழியைக் கற்க முற்படுகின்றனர். தமிழைத் தாம் கற்க வேண்டும் என்ற எண்ணம் இன்று பரவி வருகின்றது.

கயானா, ஜமெய்க்கா, சூரிநாம், கிரெனடா போன்ற கரிபியன் தீவுகளிற் குடியேறிய தமிழர் தமது மொழியை முற்றாக இழந்து விட்டனர். கலை, பண்பாட்டிலும் பெரும்பகுதியை இழந்து விட்டனர். தாம் எம் மரபினர் என்ற தெளிவின்றி இந்திய மரபினர் என்ற உணர்வோடு மட்டும் உள்ளனர்.

18-ஆம், 19-ஆம் நூற்றாண்டுகளில் புலம்பெயர்ந்த தமிழினம் தான் குடியேறிய நாடுகளிற் தனது மொழியைப் பாதுகாத்து அதன் மூலம் தன் அடையாளத்தைப் பேணிக்கொள்ள முயற்சித்தது. சிங்கப்பூர், மலேசியா, பர்மா போன்ற நாடுகளில் குடியேறியோர் தமது தனித்துவத்தை இழக்கவில்லை. இதன் விளைவாகப் பெருமை கொண்ட மக்கள் குழாமாக விளங்குகின்றனர்.

இதேவேளை பிஜி, மொரீசியசு, தென்னாபிரிக்கா போன்ற நாடுகளிற் குடியேறியோரிற் பெரும் பகுதியினர் மொழியை இழந்ததினால் இனத்திற்குரிய சிறப்பியல்புகளை இழந்து தாழ்வுற்றுத் தமது தனித்துவத்தையும் அதன் மூலம் பெற்றுக்கொள்ளக்கூடிய மதிப்பினையும் இழந்து விட்டனர். இத்தாக்கத்தை உணர்ந்ததனால் மீண்டும் மறுமலர்ச்சி பெறத்துடிக்கின்றனர்.

கயானா போன்ற கரிபியன் தீவுகளிற் குடியேறியோர் மொழியை இழந்தமையால் தமது அடையாளத்தை இழந்து விட்டனர். இவர்களிற் பலர் பல்வேறு திறமை படைத்தவராயும், பொருள் படைத்தவராயும் இருந்த பொழுதிலும் மனக்குறை கொண்டவர்களாகவே காணப்படுகின்றனர்.

18-ஆம், 19-ஆம் நூற்றாண்டுகளிற் புலம்பெயர்ந்த தமிழர் வரலாறும், புலம்பெயர்ந்த பிற இனங்களின் வரலாறும் எமக்குத் தரும் பாடம் யாதெனில் எந்த ஓர் இனம் தனது மொழி, கலை, பண்பாடுகளைப் பேணித் தன் அடையாளத்தை இழக்காது வாழ்கின்றதோ, அந்த இனமே பிற இனங்களால் மதிக்கப்படும் என்பதாகும்.

அதேவேளை, தமது மொழியை இழந்த இனக்குழுக்கள் பொருளாதாரத்தில் எவ்வளவு மேம்பட்டு இருந்தாலும் அது தனிமனித வளர்ச்சியாகவே பார்க்கப்படும் என்பதையும், ஓர் இனத்திற்குரிய பெருமையை அவர்களாற் பெறமுடியாது என்பதையும் கண்ட மொரீசியசு, பிஜி, ரியூனியன், தென்னாபிரிக்கா போன்ற நாடுகளில் குடியேறிய தமிழர் இப்பொழுது மொழியைக் கற்பிப்பதன் மூலம் மறுமலர்ச்சியைப் பெற்றுக்கொள்ள முயற்சிக்கின்றனர்.

18-ஆம் நூற்றாண்டுகளிற் புலம்பெயர்ந்த தமிழருக்குத் தமது தாய் நாட்டோடு தொடர்பு இருக்கவில்லை. புலம் பெயர்ந்தோரில் பெரும் பகுதியினர் கல்வியறிவு அற்றவர். அவ்வேளையில் தாய் நாடும் அயலவர் ஆதிக்கத்தின் கீழ் இருந்தது. புலம்பெயர்ந்து வாழும் நாடுகளிலும் அந்நாட்டு அரசுகள் தாய்மொழியைக் கற்பிக்கவில்லை. பெரும்பாலும் கல்வியே புகட்டப்படவில்லை. சமய உணர்வு ஒன்றே இவர்களை இணைத்து வைத்திருந்தது.

தாம் பொருளாதாரத்திலும் புறவாழ்விலும் மேம்பட்டிருந்த போதும் தமிழ்மொழியை இழந்து அடையாளத்தைத் தொலைத்ததன் மூலம் ஏற்பட்ட துன்பவரலாற்றின் ஊடேயும் இன்று மீண்டும் பல நாடுகளிலும் மறுமலர்ச்சி பெற்றுத் தத்தம் அடையாளங்களோடு வாழ்வதே சிறப்பு என்ற எண்ணம் மேலோங்கி வருவது பாராட்டுக்குரியது. தம் தனித்துவத்தைப் பேணுவதே தமக்குப் பெருமை என்பதையும் அதற்கு ஒரே வழி தாய்மொழி கற்றிருப்பதே என்பதையும் அம்மக்களுக்கு வரலாறு புகட்டியுள்ளது.

இன்று தமிழீழ விடுதலைப் போரினால் புலம் பெயர்ந்த எம்மக்களுக்கு அவர்களைப் போன்ற துன்பச் சூழ்நிலை இல்லை. தமிழ்மொழியைக் கற்பதற்கு எவ்வித தடையும் இல்லை. நாம் குடியேறிய நாடுகள் தாய்மொழி கற்பதை ஊக்குவிக்கின்றன. மேலும் புலம்பெயர்ந்து வாழும் நாடுகளில் உள்ள தமிழ் அமைப்புகள் தாய்மொழியைக் கற்பிக்கப் பெரிதும் முயன்று வருக்கின்றன புலம்பெயர்ந்து வாழும் மண்ணின் வாசனைக்கேற்ப பாடத்திட்டங்கள் அமைத்துச் செயற்படுகின்றன. நமது தாய் நாட்டுடனும் நெருங்கிய தொடர்பு உண்டு, அங்கிருந்து தேவையான உதவிகளும் கிடைக்கின்றன.

இவ்வாறு இன்றைய புறச்சூழல் வாய்ப்பாக இருக்கும் அதேவேளை, தாய்மொழி கற்பதன் இன்றியமையாமையை உணர்ந்து, தமிழ்மொழி அறிவினைப் பெறுவது, வலிமைமிக்க வழித்தோன்றல்களை, குடும்பத்தை, சமூகத்தை, உருவாக்குவதோடு பெருமைமிக்க இனம் என்னும் நிலையையும் பெற்றுத்தரும்.

நமது அடுத்த தலைமுறையைச் சரியாக உருவாக்கக் கிடைத்த வாய்ப்பை, நாம் தவறாது பயன்படுத்த வேண்டும் என்ற எண்ணத்தை உலகில் புலம்பெயர்ந்து வாழ்ந்த இனங்களின் வரலாற்றின் மூலம் தமிழர் கற்றுக் கொண்டார்களா? என்பது வினாக் குறியேயாகும்.

இன்றைக்கு ஐயாயிரம் ஆண்டுகளுக்கு முன்பிருந்தே வளமான மொழி, கலை, பண்பாடு, கணிதம், வானியல், கட்டடம், மருத்துவம் அன்ன பிற துறைகளில் மேலோங்கியிருந்த தமிழினம் இன்று நலிந்து

**சு.இராசரத்தினம்**

காணப்படுகின்றது. இன்று அதன் உயரிய விழுமியங்களை எமது தலைமுறை பெற்றுக்கொள்வதன் மூலம் தன்குடும்பத்தோடும், சமூகத்தோடும் இயைந்து வாழக்கூடியவர்களாக உருவாக்க முடியும். எமது பிள்ளைகளை வீட்டிலும் நாட்டிலும் சிறந்து விளங்கக் கூடியவர்களாக வளர்தெடுப்போம்.

# போதைப்பொருள் தொடர்பான குற்றச்சாட்டில்

# முதல் காலாண்டில் 3548 பேர் கைது

## -சிறிலங்கா பொலிஸ் தரப்புத் தகவல்

(கொழும்பு)

இந்த ஆண்டின் முதல் மூன்று மாத காலப்பகுதியில் போதைப் பொருள் தடுப்புப்பிரிவு பொலிஸ் மற்றும் கலால் திணைக்களம் என்பவற்றால் மேற்கொள்ளப்பட்ட 3,632 சுற்றி வளைப்பு நடவடிக்கைகளில் 3,548 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

13 கிலோ 716 கிராம் 648 மில் லிகிராம் போதைப் பொருள் கைப்பற்றப்பட்டுள்ளது போதைப் பொருள் தடுப்புப் பிரிவினர் 66 தேடுதல் நடவடிக்கைகளை மேற்கொண்டு 83 பேரைக் கைது செய்துள்ளதுடன் 11 கிலோ 470 கிராம் 378 மில்லி கிராம் போதைப் பொருளைக் கைப் பற்றியுள்ளனர்.

பொலிசார் 3293 தேடுதல் நடவடிக்கைகளை மேற்கொண்டு 3392 சந்தேக நபர்களைக் கைது செய்துள்ளனர். அத்துடன். 2கிலோ 214 கிராம் 150 மில்லிகிராம் போதைப் பொருளைக் கைப்பற்றியுள்ளனர்.

கலால் திணைக்களத்தினர் மேற்கொண்ட 73 தேடுதல் நடவடிக்கைகளில் 73 பேர் கைது செய்யப்பட்டுள்ளதுடன், 932 கிராம்120 மில்லி கிராம் போதைப்பொருளும் கைப்பற்றப்பட்டுள்ளது.

2004 ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்ட 11,625 தேடுதல் நடவடிக்கைகளில் 11,846 பேர் கைது செய்யப்பட்டுள்ளதுடன் 78 கிலோ 175 கிராம் போதைப்பொருள் கைப்பற்றப்பட்டுள்ளது.

போதைப் பொருள் கடத்தலுடன் சம்பந்தப்பட்ட 24 இலங்கையர்கள் வெளிநாடுகளில் கைது செய்யப்பட்டுள்ளனர் இந்தியா, பாகிஸ்தான், லெபனான், ஆகிய நாடுகளில் கைது செய்யப்பட்ட இவர்களில் ஒன்பது பேர் தமிழர்கள், ஒன்பது பேர் முஸ்லிம்கள் ஆறு பேர் சிங்களவர்கள் எனத் தெரிவிக்கப்படுகிறது.

1984 ஆம் ஆண்டு முதல் இதுவரை போதைபொருள் கடத்தல் குற்றத்திற்காக 49 பேருக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டுள்ளது, இவர்களில் ஒன்பது பேர் வெளிநாட்டவர்களாவர் அதில் எட்டுப் பேர் ஆண்கள் ஒருவர் பெண்ணாவார். ஒன்பது வெளிநாட்டவர்களில் மூவர் பாகிஸ்தானியர். நால்வர் இந்தியர், அவுஸ்திரேலியாவைச் சேர்ந்த ஒருவரும் பிரான்ஸ் நாட்டைச் சேர்ந்த ஒருவருமுள்ளனர்.

போதைப் பொருள் கடத்தல் குற்றத்திற்காக 94 பேர் ஆயுள் தண்டனை பெற்றுள்ளனர். இவர்களில் 14 பேர் வெளிநாட்டவர்களாவர். இதில் 13 ஆண்களும், ஒரு பெண்ணும் அடங்குவர். இவர்களில் ஐவர் பாகிஸ்தானையும், எட்டுப்பேர் இந்தியாவையும் சேர்ந்தவர்களாவர் ஒருவர் பிரிட்டனைச் சேர்ந்தவர்.


## முல்லை மாவட்டக் கட்டட நிர்மாணிகள் சங்க ஒன்று கூடல்

**29.05.2005 காலை 9.00 மணிக்குப் புதுக்குடியிருப்பு சிறி சுப்பிரமணியம் வித்தியாலயத்தில் முல்லை மாவட்டக் கட்டட நிர்மாணிகள் அனைவருக்குமான ஒன்று கூடல் நடைபெறவுள்ளதால் அனைவரையும் தவறாது கலந்து கொள்ளுமாறு வேண்டுகின்றோம்.**

*தலைவர்,*
*முல்லை மாவட்டக் கட்டட நிர்மாணிகள் சங்கம்,*
*முல்லை மாவட்டம்.*

*செயலாளர்,*
*முல்லை மாவட்டக் கட்டட நிர்மாணிகள் சங்கம்,*
*முல்லை மாவட்டம்.*

(6206)



## பயிற்சி நிறைவு விழாவும் சான்றிதழ் வழங்கும் வைபவமும்

பெண்கள் அபிவிருத்தி புனர்வாழ்வு நிறுவனத்தினால் நோர்வே நிதியுதவியுடன் நடைமுறைப்படுத்தப்பட்ட தட்டச்சு, இலத்திரனியல், மரவேலைப் பயிற்சிகளில் சித்தி அடைந்த மாண்வர்களிற்கான சான்றிதழ் வழங்கும் வைபவமும் பயிற்சி நிறைவு விழாவும், எதிர்வரும் 30.05.2005 திங்கட்கிழமை அன்று காலை10.00 மணிக்கு பெண்கள் அபிவிருத்தி புனர்வாழ்வு நிறுவன முதன்மைச் செயலகத்தில் நடைபெற இருப்பதால் கற்கைநெறி கற்ற அனைத்து மாணவர்களையும் இந்நிகழ்வில் தவறாது கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்.

தகவல்:-இ.கமலா,
திட்டப்பணிப்பாளர்,
பெ.அ.பு.நிறுவனம்,
முதன்மைச் செயலகம்.
கிளிநொச்சி.

(சி.12161)


## கொட்டாஞ்சேனையில் ஒருவர் சூட்டுக்குப் பலி!

(கொழும்பு)

கொழும்பு கொட்டாஞ்சேனையில் நேற்று முன்தினம் மாலை இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் ஒருவர் பலியானார். இவர் போதைவஸ்து விற்பனையுடன் சம்பந்தப்பட்டவரென தெரிவிக்கப்பட்டுள்ளது. சிற்றூர்தியில் அவர் சென்று கொண்டிருந்த போது அதில் வைத்தே அவர் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார்.

இவ் பயணித்த வாகனம் பொலிஸ் அதிகாரிகளுடையது என விசாரணையில் தெரியவந்தது. (32)


## முதலாம் ஆண்டின் நினைவில் ஓ தேவனே ஏன் என்னைக் கைவிட்டீர்

உயிர்ப்பு 21 - 09 - 1972

உதிர்ப்பு 29 - 05 - 2004

"பிரபு"

கிரிதர கோபாலன் மகேசன்



எங்கள் குடும்பத்தின் முதல் விளக்கே,
உன் ஒளி வெள்ளத்தில் நாங்கள்
மூழ்கிக்களித்தபோது திடீரென
அணைத்துவிட்டார்கள். துன்ப இருட்டில்
தடுமாறும் நாம். உன் மருமக்களின்
மழலைகளில் ஆறுதல் பெற முயல்கிறோம்.
ஓராண்டென்ன நூறாண்டு சென்றாலும்
உன் நினைவு நெஞ்சை விட்டகலாது.

குடும்பத்தினர்

பெரியமாமா, உங்களை இல்லை என்று
சொல்கிறார்களே, எம்முடன் பின்னிப்
பிணைந்துள்ளீர்கள் என்பது இவர்களுக்கு எப்படித்
தெரியும்.

என்றும் உங்கள் நினைவுகளுடன்,
தமிழின்பன், குழலினி (மருமக்கள்)

(6205)



## தமிழீழ மாவட்ட நீதிமன்று-கிளிநொச்சி

வ.இல:-73/94,
தன்மை:-காணி,

வழக்காளி
கண்ணையா செல்வலட்சுமி
இல:-739,முகமட்வீதி,
கட்சன் வீதி,வட்டக்கச்சி.

எதிராளிகள்
1) கதிரவேலு சிவலிங்கம்,
இல:-739,கட்சன் வீதி,
வட்டக்கச்சி.
2) சுப்பிரமணியம் இராயேஸ்வரி,
இல:738,கட்சன் வீதி,
வட்டக்கச்சி.
3) கந்தசாமி வசந்தாதேவி,
4) தாமோதரம்பிள்ளை கந்தசாமி,
இருவரும்,இல:-736,
கட்சன்வீதி,
வட்டக்கச்சி.

### பகிரங்க அறிவித்தல்

மேற்குறித்த 2 ஆம் எதிராளிக்கு!

மேற்படி வழக்கில், உமக்கு எதிராக, வழக்காளியால் தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்கில், உமக்கு அழைப்புக்கட்டளை சேர்ப்பிக்க முயன்ற பொழுதும், நீர் மேற்குறித்த முகவரியில் இல்லாமையால், உமக்குரிய அழைப்புக்கட்டளையைச் சேர்ப்பிக்க முடியவில்லை. இதனால் இப்பகிரங்க அறிவித்தல் விடப்படுகின்றது. இப்பகிரங்க அறிவித்தல் வெளியாகி 15 நாட்களுக்கிடையில் நீரோ அல்லது உமது சார்பில் அக்கறை உடையவரோ மன்றில் தோன்றி சட்டப்படியான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்றும், தவறும்பட்சத்தில் உமக்கு எதிராக ஒரு முகவிளக்கம் நடாத்தி தொடர் சட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்பதை இதனால் வெளிப்படுத்தி இப்பகிரங்க அறிவித்தல் விடப்படுகின்றது.

இந்த 2005 ஆம் ஆண்டு வைகாசி மாதம்.............. திகதி

"மன்றின் கட்டளைப்படி"

வரைபு:-தா.இ.குலசங்கர்,
வழக்காளி சட்டவாளர்,
இரத்தினபுரம் வீதி,
கிளிநொச்சி.

(சி-12162)

செ.மாணிக்கராசா,
பதிவாளர்,
தமிழீழ மாவட்ட நீதிமன்று,
கிளிநொச்சி.





## முல்லை மாவட்ட நுண்கலைக் கல்லூரியில்

ஓவியர் புகழேந்தியின்

## 'புயலின் நிறங்கள்'

ஓவியக்கண்காட்சியும், கருத்துப்பகிர்வும்

காலமும், இடமும்:- 31.05.2005-காலை 10.00 மணி
முள்ளியவளை நுண்கலைக்கல்லூரி
01.06.2005-காலை 10.00 மணி
புதுக்குடியிருப்பு நுண்கலைக்கல்லூரி,

குறிப்பு:- மாலை 4.00 மணியளவில் இரு இடங்களிலும் நடைபெறவுள்ள இளம் ஓவியர்களுக்கான கருத்துப் பகிர்வில் கலந்துகொள்ளுமாறு அனைத்து இளைய ஓவியக்கலைஞர்களையும் அன்புடன் அழைக்கின்றோம்.

முல்லை மாவட்ட நுண்கலைக்கல்லூரியினர்

(சி.11981)

# ஒன்றரை இலட்சம் இந்திய மருத்துவர்களுக்கு எயிட்ஸ் தொடர்பான பயிற்சி வழங்கப்படும்

—கிளிங்டன்

ஒன்றரை இலட்சம் இந்திய மருத்துவர்களுக்கு எயிட்ஸ் சிகிச்சைப் பயிற்சி அளிக்கப்படும் என்று கிளிங்டன் அறிவித்துள்ளார்.

சுனாமி நிவாரணப் பணிகளைப் பார்வையிடுவதற்காக அமெரிக்க முன்னாள் அதிபர் கிளிங்டன் இந்தியா சென்றார். கடந்தவியாழன் அவர் டில்லியில் நடந்த ஒரு கருத்தரங்கில் கலந்து கொண்டார்.அப்போது அவர் பேசியதாவது;


உலகம் முழுவதும் எயிட்சுக்கு தினமும் 8000 பேர் பலியாகின்றனர். இந்தியா போன்ற மக்கள் தொகை அதிகமுள்ள நாடுகளில் எயிட்ஸ் மிகப்பெரிய சவாலாக விளங்குகிறது.

எயிட்ஸ் நோயாளிகளுக்கு சிகிச்சை அளிப்பதற்காக உலகம் முழுவதும் ஏழு இலட்சம் தனியார் மருத்துவர் களுக்குப் பயிற்சி அளிக்க கிளிங்டன் அறக்கட்டளை சார்பில் திட்ட மிட்டுள்ளோம். இதன்படி 1.5 இலட் சம் இந்திய மருத்துவர்களுக்கு அடுத்த ஓராண்டில் பயிற்சி அளிக்கப்படும். மேலும் இந்தியா முழுவதும் 188 இடங்களில் எயிட்ஸ் சிகிச்சை மையங்களை உருவாக்கவும் திட்டமிட்டுள்ளோம்.

இந்தியாவில் எய்ட்சுக்கான மருந்து மிகக் குறைந்த விலையில் கிடைக்கிறது. இதற்காக இந்திய மருந்து நிறுவனங்களுக்கும், இந்திய அரசுக்கும் எனது பாராட்டுக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன் என்றார் கிளிங்டன்.



ஐ. நா சபை தூதரும் அமெரிக்க முன்னாள் அதிபருமான பில்கிளிங்டனைப் பிரதமர் மன்மோகன்சிங் கைலாகு கொடுத்து வரவேற்பதையும் பின் தமிழக நாகை மாவட்டத்தில் சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களை வீடு வீடாகச் சென்று சந்தித்து அவர்களிடம் குறைகளைக் கேட்பதையும் படத்தில் காணலாம்



மறைந்த ஜவஹர்லால் நேருவின் 41 ஆவது நினைவு தினத்தையொட்டி டில்லியில் அவரது சமாதியுள்ள சாந்திவனத்தில் நடந்தபிரார்த்தனைக் கூட்டத்தில் சோனியாகாந்தி, பிரதமர் மன்மோகன்சிங் அவரது மனைவி குர்ச்சரன்கவுர் ஆகியோர் கலந்துகொண்டபோது.

# சந்திரபாபு நாயுடு மீது அழுகியமுட்டை வீச்சு ஆந்திர மாநிலம் முழுவதும் பரபரப்பு

சந்திரபாபுநாயுடு மீதான முட்டை வீச்சுச் சம்பவம் ஆந்திரா முழுவதும் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. இச்சம்பவம் பற்றித் தெரியவருவதாவது;

தெலுங்கானா தனி மாநிலம் கோரிப் போராட்டம் நடத்த நடிகை விஜயசாந்தி முடிவு செய்து புதிய இயக்கத்தை தொடங்கவிருக்கிறார். இது குறித்து ஐதராபாத்தில் தனது ஆதரவாளர்களுடன் அவர் தீவிர ஆலோசனை நடத்தினார். இந்த ஆலோசனைக் கூட்டத்தில் பேசிய நடிகை விஜயசாந்தி காங்கிரஸ் கட்சி மீதும், தெலுங்கு தேசக் கட்சி மீது சரமாரியான குற்றச்சாட்டுகளை அள்ளி வீசினார். குறிப்பாக சந்திரபாபுநாயுடுவை விஜயசாந்தி கடுமையாகத் தாக்கினார்.

இந்த நிலையில் கடந்த வியாழன் சந்திரபாபு நாயுடு தெலுங்கானா பகுதிக்குட்பட்ட மேடக்தொகுதியிலுள்ள ராமையன் பேட்டை என்ற இடத்துக்குச் சென்றார். அப்போது திடீரென அவரை சுற்றிவளைத்த கும்பல் அவர் மீது சரமாரியாக அழுகிய முட்டைகளையும், தக்காளிகளையும் அள்ளி வீசியது. தெலுங்கானா துரோகியே இங்கு வராதே என்று அவர்கள் கோஷம் எழுப்பினார்கள் இதனால் பெரும் பரபரப்பு ஏற்பட்டது.

உடனடியாக அந்தப் பகுதிக்குப் பொலிசார் விரைந்து வந்தனர். அதன் பின்னரே நிலைமை கட்டுக்குள் வந்தது சந்திரபாபுநாயுடு மீது முட்டை வீச்சுச் சம்பவம் ஆந்திரா முழுவதும் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது. மாநிலம் முழுவதும் பொலிசார் உஷார்படுத்தப்பட்டனர்.

# கன்னியாகுமரியில் கடல் பெருகியது

கன்னியாகுமரி கடலோரப் பகுதிகளில் சில நாட்களுக்கு முன் கடற்கொந்தளிப்பு ஏற்பட்டு கடல் நீர் ஊருக்குள் புகுந்த பின்னர் மூன்று நாட்களாக அமைதியாக இருந்த கடலில் கடந்த வியாழன் மீண்டும் கொந்தளிப்பு ஏற்பட்டது. நீரொடி, வல்லவிளை, மார்த்தாண்டன்துறை, சின்னத்துறை, பூத்துறை கடலில் பகலில் மீண்டும் கடல் கொந்தளிப்பு ஏற்பட்டது.

மாலை நேரத்தில் கடல் அலை 15 அடி உயரத்துக்கு மேல் எழுந்தது. கடற்கரை மேட்டுப்பகுதியாக இருந்ததால் கடல் நீர் ஊருக்குள் வரவில்லை. ஆனாலும் கடல் கொந்தளிப்பு ஏற்பட்ட பகுதிகளிலுள்ள மக்கள் அங்கிருந்து வெளியேறிப் பாதுகாப்பான இடங்களுக்குச் சென்றனர்.



தமிழக சுழிபுரம் தேங்காய்ப்பட்டணம் கடலில் ஏற்பட்ட இராட்சத அலையைப்படத்தில்காணலாம்.

## வேடிகுண்டு புரளி

டில்லி மத்திய தகவல் தொழிநுட்ப அமைச்சகம் அமைந்துள்ள கட்டடத்தில் வெடிகுண்டு வைக்கப்பட்டிருப்பதாகக் கடந்த வியாழன் 11மணியளவில் அந்த கட்டடத்துக்கு மர்ம மனிதன் ஒருவன் தொலைபேசியில் பேசினான். இதைத் தொடர்ந்து அங்கு இருந்தவர்கள் அப்புறப்படுத்தப்பட்டுள்ளனர்.

வெடிகுண்டு நிபுணர்கள் மற்றும் மோப்ப நாய்களுடன் பொலிஸார் அங்கு சென்று சோதனையிட்டனர். ஆனால், வெடிகுண்டு எதுவும் சிக்கவில்லை. வெறும் புரளி என்று தெரியவந்தது.

# சோனியாகாந்தி மீண்டும் தலைவரானார்

அகில இந்திய காங்கிரஸ் தலைவர் சோனியாவை எதிர்த்து வேறு யாரும் வேட்பு மனுத் தாக்கல் செய்யாததால் அவர் மீண்டும் போட்டியின்றி தேர்ந்தெடுக்கப்பட்டார்.

அகல இந்திய காங்கிரஸ் தலைவர் தேர்தலில் அடுத்த மாதம் யூன் ஒன்பதாம் திகதி நடக்கும் என்றும் இதற்கான வேட்பு மனுத் தாக்கல் மே 25ஆம் திகதி தொடங்கும் என்றும் அறிவிக்கப்பட்டது.

அதன்படி கடந்த 25ஆம் திகதி வேட்புமனுத்தாக்கல் தொடங்கியது. முதல் நாள் அன்று சோனியாவிற்காக பிரதமர் மன்மோகன்சிங் முதல் வேட்பு மனுவைத் தாக்கல் செய்தார். அவரைத் தொடர்ந்து மத்தியமைச்சர்கள், மாநில காங்கிரஸ் முதல்வர்கள், மாநிலகாங்கிரஸ் தலைவர்கள் சோனியா சார்பில் வேட்பு மனுத் தாக்கல் செய்தனர். அன்று மட்டும் சோனியாவிற்காக 92 வேட்பு மனுக்கள் குவிந்தன.

வேட்பு மனுத்தாக்கல் நேற்றுப் பிற்பகல் மூன்று மணியுடன் முடிவடைந்தது. சோனியா சார்பில் நூற்றிற்கும் மேற்பட்டவேட்பு மனுத்தாக்கல் செய்யப்பட்டன. வேறு யார் சார்பிலும் வேட்பு மனுத்தாக்கல் செய்யப்படவில்லை.

அதனால் அகில இந்திய காங்கிரஸ் தலைவராக சோனியா காந்தி மீண்டும் போட்டியின்றி தேர்ந்தெடுக்கப்படுவார் என்று தேர்தல் அதிகாரியான ஆஸ்கார் பெர்னாட்டஸ் கூறினார்.

# சுவிற்சர்லாந்து–இந்தியா அணுசக்தி வளர்ச்சி ஒப்பந்தம்


சுவிற்சர்லாந்து-இந்தியா இடையே அணுசக்தி வளர்ச்சி ஒப்பந்தம், சனாதிபதி அப்துல்கலாம் முன்னிலையில் கையெழுத்தானது.

ஐரோப்பிய நாடுகளில் சனாதிபதி அப்துல்கலாம் சுற்றுப் பயணம் செய்து வருகிறார். கடந்த வியாழன் அவர் நான்கு நாள் பயணமாக சுவிற்சர்லாந்து நாட்டுக்குச் சென்றார். தலைநகர் ஜெனீவாவில் அவருக்குச் சிறப்பான வரவேற்பு அளிக்கப்பட்டது.

பின்னர் அவர் ஜெனீவாவிலுள்ள ஐரோப்பிய அணு ஆய்வு மையத்துக்குச் சென்று பார்வையிட்டார்.

அணுசக்தியை ஆக்கபூர்வ திட்டங்களுக்குப் பயன்படுத்தவும், இரு நாடுகள் இடையே வளர்ச்சித்திட்டங்களை மேற்கொள்ளவும் வகை செய்யும் ஒப்பந்தம்அப்துல்கலாம் முன்னிலையில் கையெழுத்தானது.

இந்த ஒப்பந்தத்தில் இந்திய அணுசக்தி அமைப்புத் தலைவர் அனில் கடோட்கர், ஐரோப்பிய அணுசக்திமைய, இயக்குனர் ஜெனரல் ராபர்ட் அய்மார் ஆகியோர் கையெழுத்திட்டனர்.



சென்னையில் கடந்த வியாழன் வீசிய சூழல் காற்றில் வீதியில் மரம் முறிந்து விழுந்தது. இதனால் வாகனப் போக்குவரத்து சற்று நேரம் பாதிக்கப்பட்டது.

# சென்னையில் சுழல்காற்று மக்கள் பெரும் பீதி

சென்னையை திணற வைத்த திடீர் சுழல் காற்றால் குப்பைகள் காற்றில் பறந்தன பொதுமக்கள் கடும் அவதிக்குள்ளானார்கள்.

சென்னை நகரத்தில் கடந்த வியாழன் திடீரென இச்சுழல் காற்று வீசியது. இதில் வீதியில் கிடந்த குப்பைகள் அனைத்தும் காற்றில் மேலே உயரப் பறந்தன. இதனால் பொதுமக்கள் மிகவும் அவதிக்குள்ளானார்கள்.

சென்னை வீதிகளில் சென்றவர்கள் வண்டிகளை ஓட்டமுடியாமல் சாலையோரத்தில் நிறுத்தவேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது. மரங்கள் அனைத்தும் ஆடின ஒரு சில பகுதிகளில் லேசான மழைத்தூறலும் இருந்தது.

இக்காற்றுக் காரணமாகச் சென்னை நகரில் ஆங்காங்கே மரக்கிளைகள் முறிந்து விழுந்தன. அண்ணா சாலையில் ஒருமரம் விழுந்தது.இதனால் அப் பகுதியில் போக்குவரத்து கடுமையாகப் பாதிக்கப்பட்டது. வீசிய புழுதிப்புயல் சென்னை மக்களிடையே பெரிய பீதியைக் கிளப்பியுள்ளது. ஏதோ மிகப்பெரிய இயற்கை மாற்றம் ஏற்பட்டிருப்பதாக மக்கள் கருதுகின்றார்கள்.

# பாபடோஸ் கிரிக்கெட்டில் நெருக்கடி நிலையில் பாக். அணி!



பாகிஸ்தான் கிரிக்கெட் அணி மேற்கிந்தியத் தீவுகளில் சுற்றுப்பயணம் செய்து விளையாடி வருகிறது. இரு அணிகளிடையே இரண்டு டெஸ்ட் போட்டி கொண்ட தொடரில் முதல் டெஸ்ட் பிரிட்ஜ் டவுனில் நடைபெற்று வருகிறது.

இதன் முதல் இன்னிங்சில் லாறாவின் அதிரடி சதத்தால் மேற்கிந்தியத்தீவுகள் அணி 345 ஓட்டங்கள் குவித்தது. இதைத்தொடர்ந்து முதல் இன்னிங்சை ஆடிய பாகிஸ்தான் முதல் நாள் ஆட்டநேர முடிவில் விக்கெட் இழப்பின்றி 22 ஓட்டங்கள் எடுத்திருந்தது. சல்மான்பட் பத்து ஓட்டங்களுடனும், அப்ரிடி பன்னிரண்டு ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்காமல் இருந்தனர்.

நேற்றுமுன்தினம் இரண்டாவது நாள் ஆட்டம் நடந்தது. பாகிஸ்தான் தொடர்ந்து ஆடியது. மேற்கிந்தியத்தீவுகள் அணி அபாரப் பந்துவீச்சில் பாகிஸ்தானின் விக்கெட்டுக்கள் சரியத் தொடங்கியது. அந்த அணி நூறு ஓட்டங்கள் எடுப்பதற்குள் ஆறு முக்கிய விக்கெட்டுக்களை இழந்தது. அதிரடி ஆட்டக்காரரான அப்ரிடி 16 ஓட்டங்களில் எட்வர்ட் பந்தில் ஆட்டமிந்தார். அடுத்து களமிறங்கிய ஹமீது 12ஓட்டங் களும், சல்மான்பட் 27 ஓட்டங்களும், பாசித்கான் ஆறு ஓட்டங்களும், அசிம்கமான் ஓட்டங்கள் ஏதும் எடுக்காமல் ஆட்டமிழந்தனர். அணியைச் சரிவிலிருந்து மீட்பாரென எதிர்பார்க்கப்பட்ட தலைவர் யூனிஸ்கான் 31 ஓட்டங்களில் ஆட்டமிழந்தார். அவரது விக்கெட்டுக்களை எட்வர்ட் கைப்பற்றினார்.

அடுத்து வந்த வீரர்கள் சொற்ப ஓட்டங்களில் ஆட்டமிழந்தனர். முடிவில் பாகிஸ்தான் 144 ஓட்டங்களுக்கு அணியின் அனைத்து வீரர்களும் ஆட்டமிழந்தனர். மேற்கிந்தியத்தீவுகள் அணி தரப்பில் எட்வர்ட் அபாரமாக பந்து வீசி 38 ஓட்டங்கள் கொடுத்து ஐந்து விக்கெட் கைப்பற்றினார். கோலிமோத் மூன்று விக்கெட்டும், கிங் இரண்டு விக்கெட்டும் எடுத்தனர்.

தொடர்ந்து ஆடுவதைத் தவிர்க்க (பலவோனைத் தவிர்க்க) பாகிஸ்தான் 145 ஓட்டங்களை எடுத்திருத்தல்வேண்டும். ஆனால் அந்த அணி 144 ஓட்டங்களுக்கு ஆட்டமிழந்தது. ஆனால் மேற்கிந்தியத்தீவுகள் அணித் தலைவர் சந்தர்போல் பாகிஸ்தானுக்கு தொடர்ந்து ஆடக் கொடுக்கவில்லை. இதைத் தொடர்ந்து 201 ஓட்டங்கள் முன்னிலையுடன் மேற்கிந்தியத் தீவு தனது இரண்டாவது இன்னிங்சை ஆடத் தொடங்கியது. தொடக்க ஆட்டக்காரராக கெய்லும், சுமித்தும் களமிறங்கினர். ஓட்ட எண்ணிக்கை 59 ஆக இருந்தபோது சுமித் ஆட்டமிழந்தார்.


இரண்டாவது விக்கெட்டுக்கு ஜோடி சேர்ந்த சர்வான் ஒரு ஓட்டத்துடன் ஆட்டமிழந்தார். அடுத்து லாறா களமிறங்கினார். லாறாவும், கெய்லும் அதிரடியாக ஆடி ஓட்டங்களைச் சேர்த்தனர். கெய்ல் அரைச்சதம் அடித்தார். சொந்த எண்ணிக்கை 65ஆக இருந்த போது கனிராவின் பந்தில் கெய்ல் ஆட்டமிந்தார். அவர் 57 பந்துகளில் நான்கு பவுண்டறியுடன் 50 ஓட்டங்களை எடுத்தார்.

அதிரடியாக ஆடிவந்த லாறா 48 ஓட்டங்கள் எடுத்த நிலையில் அப்ரிடியின் பந்தில் ஆட்டமிழந்தார். அவர் 52 பந்தில் ஐந்து பவுண்டறி ஒரு சிக்சருடன் இந்த ஓட்டங்களை எடுத்தார்.

நேற்றைய ஆட்ட நேரமுடிவில் மேற்கிந்தியத் தீவு நான்கு விக்கெட் இழப்பிற்கு 168 ஓட்டங்களை எடுத்திருந்தது. சந்தர்போல் 37 ஓட்டத்துடனும், ஹிண்ட்ஸ்14 ஓட்டத்துடனும் ஆட்டமிழக்காமல் இருந்தனர்.




# லோட்ஸ் டெஸ்ட் கிரிக்கெட் இங்கிலாந்துக்கு வெற்றி வாய்ப்பு



லண்டன் லோட்ஸ் மைதானத்தில் நடைபெறும் பங்களாதேஷ் அணியுடனான முதலாவது டெஸ்ட் கிரிக்கெட்டில் இங்கிலாந்து அணி வெற்றி பெறும் நிலையிலுள்ளது.

நேற்று முன்தினம் இங்கிலாந்து தனது முதல் இன்னிங்சில் ஒரு விக்கெட்டை இழந்து 188 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில் தொடர்ந்து ஆடி மேலும் இரண்டு விக்கெட்டுக்களை இழந்து 528 ஓட்டங்களைப்பெற்று ஆட்டத்தை நிறுத்திக் கொண்டது. அவ்வணியின் மார்கஸ் ரெஸ்கொதிக்கும், அணித் தலைவர் மைக்கல்வோனும் முறையே 194, 120 என்ற ஓட்டங்களைப் பெற்றனர். இயன் பெல் 65 ஓட்டங்களைப் பெற்றார்.

பின்னர் தேநீர் இடைவேளையின் பின் தனது இரண்டாவது இன்னிங்சை தொடர்ந்த பங்களாதேஷ் அணி ஆட்ட நேரமுடிவில் 90 ஓட்டங்களில் ஐந்து விக்கெட்டுக்களை இழந்திருந்தது.

முதலாவது இனிங்சில் பங்களாதேஷ் அணி 108 ஓட்டங்களுக்குள் சகல விக்கெட்டுக்களையும் இழந்திருந்தமை தெரிந்ததே.

# வீனஸ் வில்லியம்ஸ் பரிதாப தோல்வி



பிரான்சில் நடைபெறும் பிரான்ஸ் ஓபன் டென்னிஸ் பெண்கள் பிரிவு ஒற்றையர் ஆட்டத்தில் மூன்றாவது சுற்றில் அமெரிக்க வீராங்கனை வீனஸ் வில்லியம்ஸ் பல்கேரியாவின் 15 வயது சிசில் கரடன்சிவா விடம் தோல்வியடைந்தார்.

கடந்த 2002 ஆம் ஆண்டு இதே தொடரில் கிண்ணத்தை வென்ற வீனஸ் கடந்த வருடம் ஜுனியர் போட்டித் தொடரை வென்ற மேற்படி 15 வயது இளம் வீராங்கனையிடம் 6-3, 1-6, 6-1 என்ற கணக்கில் தோல்வியடைந்தார். உலக தரவரிசையில் 98 ஆவது இடத்தை வகிக்கும் கரடன் சிவாவிற்கு இதுவே சீனியர் தர முதல் போட்டியாகும். இதேவேளை ஆண்களுக்கான ஒற்றையர் பிரிவில் றோஜர் பெடரரும், றபேல் நடேலும் முறையே பெர்னாண்டோ கொன்சலிசையும், றிச்சாட் கஸ்கிட்டையும் வென்று நான்காவது சுற்றுக்குத் தகுதி பெற்றுள்ளனர். பெடரர் அடுத்த போட்டியில் முன்னாள் உலகச் சம்பியனான கார்ளோஸ் மோயாவை எதிர்த்தும் நடேல் செபஸ்தியான் கிறஸ்ஜினை எதிர்த்தும் ஆடுவர்.

# ஒலிம்பிக் தீபத்தை எவரெஸ்ட் கொண்டு செல்ல சீனா திட்டம்!

உலகின் மிக உயரமான எவரெஸ்ட் சிகரத்திற்கு ஒலிம்பிக் ஜோதியைக் கொண்டு செல்ல சீனா திட்டமிட்டுள்ளது.

வரும் 2008இல் சீனத் தலைநகர் பீஜிங்கில் ஒலிம்பிக் போட்டிகள் நடக்கிறன. இதற்கான ஏற்பாடுகள் தீவிரமாக நடந்து வருகின்றன. இப் போட்டிக்கான ஜோதியை எவரெஸ்ட் சிகரத்திற்கு கொண்டு போய் புதிய சாதனை படைக்க இருப்பதாக ஒலிம்பிக் அமைப்பு சபையின் செய்தித் தொடர்பாளர் ஜுஜிங் தெரிவித்தார்.

எட்டு ஆயிரத்து 850 மீற்றர் உயரம் கொண்ட எவரெஸ்ட் சிகரம் சீனா - நேபாளத்தின் எல்லையில் அமைந்துள்ளது. எட்ட முடியாத இந்த சிகரத்தின் உச்சிக்கு ஜோதியை கொண்டு சென்று சாதிக்கத் திட்டமிட்டுள்ளோம். இதற்கான பாதையை கண்டறியும் பணியில் நிபுணர்கள் ஈடுபட்டுள்ளனர் என்று ஜுஜிங் குறிப்பிட்டார்.

இதேபோல் பெண்கள் குத்துச் சண்டையை பீஜிங் ஒலிம்பிக்கில் அறிமுகப்படுத்தவும் திட்டமிட்டுள்ளது. இது தொடர்பான முயற்சியை சர்வதேச பெண்கள் குத்துச் சண்டைசங்கம் மேற்கொண்டுள்ளது.

இதுவெற்றி பெற்றால் இந்தியாவுக்கு பதக்கம் கிடைப்பது உறுதி தற்போது ஆசிய அளவிலான ரேங்கிங் பட்டியலில் இரண்டாவது இடத்திலுள்ள இந்தியா, உலக அளவில் ஐந்தாவது இடத்தில் இருக்கிறது. இந்திய நட்சத்திர வீராங்கனை மேரிகாம் (46 கி.கி) நடப்பு உலக ஆசிய சம்பியனாகத் திகழ்கிறார். தற்போதைய நிலையில் பெண்கள் குத்துச் சண்டையை சேர்ப்பது தொடர்பாக சர்வதேச ஒலிம்பிக் சபை கொள்கை அளவில் ஒத்துக் கொண்டுள்ளது.

# கவுன்றிப் போட்டிகளுக்கு கங்குலிக்கு அனுமதி



இங்கிலாந்து கவுன்றி போட்டியில் விளையாட தலைவர் சவுரவ் கங்குலிக்கு இந்திய கிரிக்கெட்சபை அனுமதி வழங்கியது.

இந்திய அணிவரும் ஓகஸ்டில் தான் இலங்கைக்கு சுற்றுப்பயணம் செல்கிறது இதற்கு முன்பாக இங்கிலாந்தில் நடக்கும் கவுன்றி போட்டிகளில் விளையாட கங்குலி விருப்பம்தெரிவித் திருந்தார். இது குறித்து நேற்று முன்தினம் ஆலோசனை செய்த நமது கிரிக்கெட் சபை அனுமதி வழங்கியுள்ளது. நேற்று திருவனந்த புரத்தில் கிரிக்கெட்சபை செயலாளர் எஸ்.கே.நாயர் கூறுகையில் கவுன்றி போட்டியில் விளையாட கங்குலிக்கு அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. தேவைப்பட்டால் எந்த நேரத்திலும் கவுன்றி அணியிலிருந்து அவர் நாடு திரும்பவேண்டும் என்ற நிபந்தனையும் விதிக்கப்பட்டுள்ளது என்றார்.

இங்கிலாந்தின் கிளா மோர்கன் கவுன்றி அணிக்காக கங்குலி விளையாடுகிறார் ஜுன் முதலாம் திகதி நடக்கும் சசக்ஸ் அணிக்கு எதிரான போட்டியில் இவர் களமிறங்க உள்ளார். ஆறு சர்வதேச போட்டிகளில் விளையாட தடை விதிக்கப்பட்டுள்ள இவர் மீண்டும் நல்ல நிலைக்குத் திரும்பும் பொருட்டு இரண்டு மாதங்கள் கவுன்றி அணியில் நீடிப்பார் என தெரிகிறது.

# முல்லை மாவட்ட பாடசாலைகளுக்கிடையிலான உதைபந்தாட்ட, வலைபந்தாட்டப் போட்டிகள்

முல்லை மாவட்ட பாடசாலைகளுக்கிடையிலான உதைபந்தாட்டம், வலைபந்தாட்டப்போட்டிகள் கடந்த வியாழக்கிழமை புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரியிலும், புதுக்குடியிருப்பு சிறிசுப்பிரமணிய வித்தியாசாலையிலும், புதுக்குடியிருப்பு றோமன்கத்தோலிக்க வித்தியாலயத்திலும் இடம்பெற்றன.

இப்போட்டிகளில் 17 வயது ஆண்களுக்கான உதைபந்தாட்டப்போட்டியில் முதலாம் இடத்தை கொக்கிளாய் அ.த.க.பாடசாலையும், இரண்டாம் இடத்தை புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரியும், மூன்றாம் இடத்தை மல்லாவி மத்திய கல்லூரியும் பெற்றுக்கொண்டன.

19 வயது ஆண்களுக்கான போட்டியில் முதலாம் இடத்தை புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரியும் இரண்டாம் இடத்தை கற்சிலைமடு அ.த.க. பாடசாலையும், மூன்றாம் இடத்தை பாலிநகர் மகாவித்தியாலயமும் பெற்றுக்கொண்டன.

15 வயதுப் பெண்களுக்கான வலைப்பந்தாட்டப்போட்டியில் முதலாம் இடத்தை புதுக்குடியிருப்பு மத்தியகல்லூரியும், இரண்டாம் இடத்தை கொக்கிளாய் அ.த.க.பாடசாலையும், மூன்றாம் இடத்தை ஐயன்கன்குளம் அ.த.க.பாடசாலையும் பெற்றுக்கொண்டன.

17 வயதுப் பெண்கள் பிரிவில் முதலாம் இடத்தை பாலிநகர் மகாவித்தியாலயமும், இரண்டாம் இடத்தை புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரியும், மூன்றாம் இடத்தை கொக்கிளாய் அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலையும் பெற்றுக்கொண்டன.

19 வயதுப் பெண்கள் பிரிவில் முதலாம் இடத்தை பாலிநகர் மகாவித்தியாலயமும், இரண்டாம் இடத்தை இரணைப்பாலை மகாவித்தியாலயமும், மூன்றாம் இடத்தை புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரியும் பெற்றுக் கொண்டன.

இப்போட்டியில் முதலாம், இரண்டாம், இடங்களைப் பெற்ற அணியினர் மாகாணமட்டப் போட்டிக்குப் தெரிவாகியுள்ளனர்.


-மாணவர் எழுச்சி நாளை முன்னிட்டு-

# வங்காலை ம.மகாவித்தியாலயத்தில் உடற்பயிற்சிப் போட்டிகள்

மாணவர் எழுச்சி நாளை முன்னிட்டு நேற்றுமுன்தினம் மன்னார் மாவட்ட வாங்காலை மத்திய மகாவித்தியாலய விளையாட்டு மைதானத்தில் உடற்பயிற்சிப் போட்டிகள் இடம்பெற்றன.

இப்போட்டியில் முதலாம் இடத்தை உயிலங்குளம் றோ.க.பாடசாலையும், இரண்டாம் இடத்தை நானாட்டான் மத்திய மகாவித்தியாலயமும், மூன்றாம் இடத்தை வங்காலை மத்திய மகாவித்தியாலயமும் பெற்றுக்கொண்டன.

நேற்று மாணவர்களுக்கான துவிச்சக்கர வண்டி ஓட்டப்போட்டி முருங்கன் சிறுக்கந்தர்சந்தியில் ஆரம்பமாகி அரிப்பு வரைசென்றடைந்தது. இப்போட்டிக்கான ஏற்பாடுகளை மன்னார் கல்விக்கழகமும், மன்னார் கல்வித் திணைக்களமும், மன்னார் மாவட்ட மாணவர் அமைப்பும் இணைந்து செய்தனர். (18)



## சிந்தனைக்கு

ஒடுக்கப்பட்ட மக்களே ஒடுக்கு முறைக்கு எதிராகப் போராட வேண்டும்; அநீதிக்கு ஆளாகி நிற்பவர்களே அநீதியை ஒழித்துக்கட்ட முன்வர வேண்டும்.

தமிழீழ தேசியத் தலைவர்.

ஈழநாதம்
மக்கள் நாளிதழ்
யாழ்.சாலை,கிளிநொச்சி. 29-05-2005
தொலைபேசி 060-2213244
தொலைநகல் 021-2283948
மின் அஞ்சல் natham23 ela@ yahoo.com

## இது ஒன்றும் புதிதல்ல

பிந்துனுவெவ தடுப்பு முகாமில் 24 தமிழ் இளைஞர் படுகொலை தொடர்பாகக் குற்றம் சாட்டப்பட்ட அனைவருமே தற்பொழுது விடுதலையாகிவிட்டனர். இதில் மேல் முறையீட்டு நீதிமன்றத்தால் மரணதண்டனை விதிக்கப்பட்டிருந்த நான்குபேரையும் உயர் நீதிமன்றம் விடுதலை செய்துள்ளது.

மேல் முறையீட்டு நீதி மன்றம் மரணதண்டனை விதிக்கும் அளவிற்கு ஆதாரங்கள் காணப்பட்ட வழக்கு ஒன்றில் உயர் நீதிமன்றத்திற்கு ஆயுள்தண்டனையோ அன்றி அதற்குக் குறைந்த பட்ச தண்டனையோ விதிக்கப்பட முடியாமல் போனமை சிறிலங்கா நீதித்துறை பற்றிய பலத்த கேள்வியை எழவைக்கக் கூடியதாகும்.

ஆனால் உயர்நீதிமன்றத்தின் இத் தீர்ப்புக் குறித்து தமிழ்மக்கள் தரப்பில் ஆச்சரியம் எதுவும் தெரிவிக்கப்படவில்லை. இக்குற்றம் சாட் டப்பட்டவர்களுக்கு மரணதண்டனை நிறைவேற்றப்படப் போவதில்லை. என்பது எதிர்பார்க்கப்பட்டதொன்றே. ஆயினும் இவர்களைத் தற்பொழுது நீதிமன்றம் விடுவித்துத் தீர்ப்பளித்தபோது ஏற்பட்ட ஆச்சரியத்தை விட இவர்களுக்கு மேல் முறையீட்டு நீதிமன்றம் மரணதண்டனை வழங்கித் தீர்ப்பளித்ததே தமிழர் தரப்பிற்கு ஆச்சரியப்படத்தக்கதாக இருந்தது.

தமிழர் மீதான இன அழிப்பு நடவடிக்கைகளுக்கென இதுவரையில் சிங்கள ஆட்சியாளர்களினால் பாராட்டுதல்களும், பதவி உயர்வுகளும் பதக்கங்களுமே வழங்கப்பட்டவையாகும். இந்நிலையில் தமிழ் இளைஞர்கள் படுகொலைகளுக்கு சிங்கள அதிகாரிகளுக்குத் தண்டனை வழங்குவதென்பது ஆச்சரியப்படத்தக்க தொன்றே. அவ்வாறு தண்டனை வழங்குவதானால் சிறிலங்காவில் உள்ள உயர் அதிகாரிகளும், இராணுவ அதிகாரிகளும் இன்று தமது பதவியில் தொடர்வதற்கான அருகதை அற்றவர்களாகவே இருப்பர் பெரும் பான்மையானோர் சிறைகளிலேயே இருக்க வேண்டிய தாகியிருக்கும்.

ஆனால் அவ்வாறு எதுவும் நடைபெறவில்லை. பல படுகொலைகளுக்கு யார் பொறுப்பு எனத் தெரிந்திருந்தும் அவர்கள் சட்டத்தின் முன் நிறுத்தப்படவில்லை. மாறாக அவர்களுக்குப் பதவி உயர்வும் வழங்கப்பட்டமையே வரலாறாகும். எடுத்துக்காட்டாக மேஜர் ஜெனரல் ஜானகபெரேரா போன்றவர்கள் பல படுகொலைகளுக்குப் பொறுப்பாக இருந்தபோதும் அவர்களுக்குப் பதவி உயர்வுகளே கிடைத்துள்ளன.

இந்தவகையில் பிந்துனுவெவ படுகொலையுடன் சம்பந்தப்பட்டவர்களுக்குத் தண்டனை வழங்குவதாக முன்னர் வெளியான தகவல்களே ஆச்சரியத்திற்குரியவையாகும். ஆகையினால் தற்பொழுது அவர்கள் விடுவிக்கப்பட்டமையானது ஒன்றும் ஆச்சரியத்திற்குரியதல்ல. இவ்விடயத்தில் தற்பொழுது கேட்கப்படக் கூடிய கேள்வி இவர்களுக்கு ஏன்முன்னர் தண்டனை வழங்கப்பட்டது என்பதே.

ஆனால் இவ்வழக்கு விசாரணையில் படுகொலை செய்யப்பட்டவர்கள் வழக்கை முன்னின்று நடத்திய மனித உரிமை ஆர்வலரானகந்தசாமி என்பவர் குற்றவியல் சட்டத்தில் உள்ளகுறைபாடே இவர்கள் விடுதலை செய்யப்பட்டமைக்குக் காரணம் என பி.பி.சிக்கு வழங்கிய பேட்டியில் தெரிவித்திருந்தமை அவரின் தவறான மதிப்பீட்டையே காட்டுவதாகும்.

ஏனெனில் சிறிலங்கா பிந்துனுவெவ படுகொலைக் குற்றவாளிகள் தப்பித்துச் செல்வதற்கு சிறிலங்கா குற்றிவியல் சட்டத்திலுள்ள ஓட்டைகள், தவறுகள் என்பன காரணம் அல்ல. அவ்வாறு ஓட்டைகள், தவறுகள், காரணமாக இருப்பின் தமிழ் இளைஞர்கள் பலருக்கு மரணதண்டனைத் தீர்ப்புக்களையும், ஆயுள்தண்டனைத் தீர்ப்புக்களையும், நீண்டகால சிறைத்தண்டனைத் தீர்ப்புக்களையும் வழங்கியிருக்கமுடியாது.

ஆகையினால் பிந்துனுவெவ படுகொலைகள் தொடர்பான குற்றச்சாட்டுக்களில் இருந்து குற்றவாளிகள் தப்பித்துக் கொண்டமைக்கு அரசியல் மயப்படுத்தப்பட்டுள்ள நீதித்துறையும், நீதித்துறைக்குள் புகுந்துவிட்ட இனவாத சிந்தனையுமே காரணமாகும்.

அதுமட்டுமன்றி நீதித்துறையின் செயற்பாட்டிற்கும் அடிப்படையாகவுள்ளன. பொலிஸ் துறை போன்றவற்றில் காணப்படும் இனவாதச் சிந்தனையும், ஊழல் மோசடிகள் என்பனவும் காரணமாகும்.

இவை யாவற்றையும்விட தமிழ்மக்கள் மீதான படுகொலைகள் அழிப்பு நடவடிக்கைகள் என்பனவற்றிற்கு அரசாங்கம் பதில் அளிக்க வேண்டியதான பொறுப்பில் இல்லாமையும்.முக்கிய காரணமாகும். அதாவது பிந்துனுவெவ படுகொலையில் குற்றம் சாட்டப்பட்டவர்கள் விடுவிக்கப்பட்டுள்ளனர் எனின் இக்குற்றச்செயல்களுக்கு யார் பொறுப்பு என்பதில் அரசாங்கம் அக்கறை அற்றிருப்பது அன்றி அது தேவையற்றதொன்றெனக் கருதுவதே காரணமாகும்.

அதாவது தமிழ்மக்கள் படுகொலைகள் தொடர்பாக பொறுப்பேற்க வேண்டிய தேவையோ, அவசியமோ அரசாங்கத்திற்கில்லை. ஏனெனில் தமிழ்இன அழிப்பில் அரசாங்கம் நேரடியாகவோ அன்றி மறைமுகமாகவோ சம்பந்தப்பட்டதாகவுள்ளது. இந்நிலையில் பிந்துனுவெவ படுகொலைக் குற்றவாளிகளை விடுவிப்பதற்கான முயற்சிகளை மேற்கொள்வதே அரசாங்கத்தின் பணியாக இருக்கக்கூடியதே ஒழிய குற்றவாளிகளைக் கண்டறிந்து தண்டிப்பது அதன்நோக்கம் அல்ல.

# ஆழிப்பேரலை மீளமைப்பு பணிகளில் சிறிலங்கா அரசு செயலற்று கிடக்கின்றது

## லண்டன் டெயிலி கிராப் சாடல்

(லண்டன்)

ஆழிப்பேரலை மீளமைப்புப் பணிகளில் சிறிலங்கா அரசு செயலற்றுக் கிடப்பதாக லண்டன் டெயிலிகிராப் நாளிதழ் சாடியுள்ளது.

நேற்று டெயிலிகிராப் வெளியிட்ட செய்திக் கட்டுரையிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. தென்னிலங்கையில் ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்ட காலிப் பகுதியை பார்வையிடச் சென்றபோது அங்கே தென்பட்டது அனைத்தும் கூடாரங்கள்தான்.

பல மில்லியன் பணத்தை கொட்டிக் கொடுத்த இங்கிலாந்து மக்கள் ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்டோருக்கான வீடுகளைக் கட்ட தங்களது தொகையால் செங்கற்களும், சீமெந்தும், மரங்களும் லொறி லொறியாக அந்த மக்களுக்கு சென்றடைந்திருக்கும் என்று கற்பனை செய்து கொண்டிருக்கும் என எண்ணுகிற அவர்கள் உண்மை நிலையைப் பார்த்தால் மூச்சடைத்து நின்று விடுவார்கள். அந்தப் பகுதியில் இப்படியான ஒரு நிகழ்வுக்கு இடமே இல்லை ஒரு லொறி கூடக் கிடையாது.

இது குறித்து சிங்கள ஊடகவியலாளர் சுகத்பால கூறுகையில்;

இங்கே தற்காலிக கொட்டகைகளில் மக்கள் மட்டும் உறங்கவில்லை. பணிகளைச் செய்ய வேண்டிய அனைவருமே உறங்கித்தான் கொண்டிருக்கிறார்கள் என்றார்.

நிதியுதவிகள் அனைத்தும் தனது கூடையிலேயே சேகரிக்கப்பட வேண்டும் என்ற அரசின் எண்ணத்தால் மீளமைப்புப் பணிகள் மிக மிக மெதுவாக நடை பெறுகின்றன.

தற்காலிகக் கொட்டகைகள் ஒரே அறையைக் கொண்டவைதான். தகரக் கூரைகளால் அமைக்கப்பட்டவை. இவை பாதுகாப்பானவையும் அல்ல. இந்தக் கூரைகளை அமைக்கும்போது மரங்களுக்கான ஆணி அடிப்பதால் அவை பாதிப்படைந்து ஒழுகி விடும் என்று கூறும் தன்னார்வ அமைப்புகளுடன் தொடர்புடைய பொறியியலாளர்கள் இது குறித்து அரசிடம் எச்சரித்ததாகவும் தெரிவித்தனர். யாரும் இது குறித்து அக்கறை கொள்ளவில்லை.

ஐ.நா சபையின் அறிவித்தல் ஒன்றையும் எமது டெய்லி கிராப் செய்தியாளர்கள் பார்வையிட்டனர். அதில் இந்தத் தற்காலிக குடியிருப்புக்கள் ஒரு மாதத்திற்குள்ளாகவோ அதற்கு முன்னதாகவோ தரம் உயர்த்தப்படும் என்று உறுதியளிக்கப்பட்டிருந்தது.

சிறிலங்கா அரசின் நிர்வாகத்தைச் சுட்டிக்காட்டிப் பேசும் தன்னார்வ அமைப்பினர் அதன் இயலாமையை, ஆற்றாமையை வெளிப்படுத்தினர்.

காலியில் இன்னும் தற்காலிக கொட்டகைகளில் ஆயிரக் கணக்கான குடும்பங்கள் வசித்து வருகின்றன. ஆனால் உள்ளூர் அரசு நிர்வாகமோ சர்வதேச கண்களில் இவர்கள் பட்டு விட்டால் தமக்கு கெட்ட பெயர் என்று எண்ணி இந்தத் தற்காலிக தங்கு மிடங்களை அதிகார பூர்வமாக மூடப் போவதாக அறிவித்துள்ளது.

சிறிலங்காவில் யதார்த்த நிலைமைகளுக்கும் அரசு அதிகாரிகளுக்கும் இடையே அடிப்படையிலேயே, தொடர்பில்லாமல் இருக்கிறது என்பதையே இது காட்டுகிறது.

அரசின் இந்த அறிவிப்பை மக்கள் ஒன்றும் எளிதில் மறந்து விட மாட்டார்கள். அது கோபத்தையும், கொந்தளிப்பையும் ஒவ்வொரு நாளும் அதிகரிக்கவே செய்யும் என அப் பத்திரிகை மேலும் தெரிவித்துள்ளது.

# வட- கிழக்கு சுகாதாரத்துறை பணியாளர்கள் இரு நாள் வேலை நிறுத்தப் போராட்டம்

(கொழும்பு)

இலங்கையின் வடக்கு கிழக்கில் பணியாற்றும் சிறிலங்கா அரசின் சுகாதாரத்துறை பணியாளர்கள் வேலை நிறுத்த எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

இது குறித்து சுகாதாரத்துறை தொழிற்சங்கத்தலைவர் ரவி குமுதேஸ் தெரிவிக்கையில்;

2005 ஆம் ஆண்டு வரவு செலவுத்திட்டத்தில் அறிவிக்கப்பட்ட ஊதிய உயர்வு அளிக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கையை வலியுறுத்தி அடுத்த மாதம் எட்டாம், ஒன்பதாம் திகதிகளில் அடையாள வேலை நிறுத்தப் போராட்டத்தை வடக்கு கிழக்கு சுகாதாரப் பணியாளர்கள் நடத்துகின்றனர்.

இந்த வாரத்தின் இறுதியில் இப் போராட்டம் நடத்தத் திட்டமிடப்பட்டிருந்தது. எமது தொழிற்சங்க வேண்டுகோளை ஏற்று ஜூன் மாதம் வரை ஒத்தி வைக்கப்பட்டுள்ளது.

அனைத்து உள்ளூராட்சி நிர்வாகங்கள் மற்றும் அரச நிறுவனங்களுக்கு சுகாதாரத்துறை அமைச்சு அனுப்பிய சுற்றறிக்கையில் ஊதிய உயர்வுக்கான ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

நாட்டின் பல்வேறு மாகாணங்களில் இந்த ஊதிய உயர்வு அளிக்கப்பட்டு விட்டது. ஆனால் வடக்கு கிழக்குப் பகுதியில் மட்டும் நிறைவேற்றப்படவில்லை என அவர் மேலும் தெரிவித்தார்.

# பகுதிநேரஆங்கில ஆசிரியர் விபரங்களை விரைவாக அனுப்பக் கோரிக்கை

(நமது நிருபர்)

பகுதிநேர ஆங்கில ஆசிரியர்கள் தொடர்பான விபரங்களை சமர்ப்பிக்குமாறு வடகிழக்கிலுள்ள 24 வலயங்களிடமும் கோரப்பட்டுள்ளன இவர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்குவது தொடர்பான நடவடிக்கைகளை எடுப்பதற்காக இந்த விபரங்கள் யாவும் மத்திய அரசாங்கத்திற்கு அனுப்பி வைக்கப்படவுள்ளன என வடக்கு கிழக்கு கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை அமைச்சின் ஆசிரிய நியமனக் கிளையின் உதவிக்கல்விப் பணிப்பாளர் கிருஷ்ணகுமார் தெரிவித்துள்ளார்.

இரண்டு வாரங்களுக்குள் இவ் விபரங்களை சமர்ப்பிக்குமாறு வலயக் கல்விப்பணிப்பாளர்களிடம் கோரப்பட்டுள்ளது.

2000, 2001 ஆம் ஆண்டுகளில் சேவையில் இருந்த ஆங்கில ஆசிரியர்களின் விபரங்களை வழங்குமாறு மத்திய அரசாங்கம் மாகாணக்கல்வி அமைச்சிடம் கோரியுள்ளது.

இந்த விபரங்கள் வலயக் கல்விப்பணிப்பாளர்களால் மாகாணக் கல்வி அமைச்சுக்கு அனுப்பி வைக்கப்பட்டதும் அவை உடனடியாக மத்திய அரசாங்கத்திற்கு அனுப்பி வைக்கப்படும். எனவே வலயக் கல்விப் பணிப்பாளர்கள் இவ் விபரங்களை விரைவாக அனுப்பி வைக்குமாறு அவர் மேலும் கேட்டுள்ளார்.

# ஆழிப்பேரலை பொதுக்கட்டமைப்பு; யுத்தத்திற்கு எதிரான முன்னணி வரவேற்பு

(கொழும்பு)

ஆழிப்பேரலை மீளமைப்பிற்கான பொதுக் கட்டமைப்பை யுத்தத்திற்கு எதிரான தேசிய முன்னணி அமைப்பு வரவேற்றுள்ளது.

கொழும்பில் நேற்று முன்தினம் இந்த அமைப்பின் சார்பில் நடைபெற்ற கூட்டத்தில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டது. நாட்டில் இடம் பெற்ற யுத்தத்தினால் மூவினங்களைச் சேர்ந்த மக்கள் பல்வேறு விதத்தில் நெருக் கடிகளை எதிர் நோக்கியுள்ளனர்.

20 வருடத்திற்கு மேற்பட்ட காலமாக இலங்கையில் இடம்பெற்ற யுத்தத்தினால் சுமார் 60 ஆயிரம் மனித உயிர்கள் பலியாகியுள்ளன. 10 இலட்சம் அளவிலானோர் சொத்துக்களை இழந்துள்ளனர்.

ஆழிப்பேரலை வடக்கு கிழக்குப் பகுதிகளில் மட்டுமன்றி தெற்கையும் கூடுதலாக பாதித்திருக்கிறது. எனினும் புள்ளி விபரங்கள் அடிப்படையில் 60 வீதமான அழிவு வடக்கு கிழக்கு பிரதேசத்தில் ஏற்பட்டுள்ளது.

ஆகவே பொதுக்கட்டமைப்பு என்பதை ஒரு இணக்கப்பாடுடைய தீர்விற்கான பிரவேசமாக கொள்ள வேண்டும் என்று அக் கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது.

# வருங்கால சந்ததி சுதந்திரமாக வாழ தலைவரின் கரத்தை பலப்படுத்துவோம்!

## கிளி.மாவட்ட தே.எ.பே.செயலர்

(அலுவலக செய்தியாளர்)

எமது வருங்காலச்சந்ததி இந்த மண்ணில் சுதந்திரமாக வாழ வேண்டுமெனில் நாம் அனைவரும் ஒன்றுபட்டு எமது தேசியத்தலைவரின் கரங்களை பலப்படுத்தி தேசியத தலைவரின் காலத்தில் எமது விடுதலையினை வென் றெடுப்போமென அனைவரும் திடசங்கற்பம் கொள்வோம் என கிளிநொச்சி, மாவட்ட தேசிய எழுச்சிப்பேரவைச் செயலர் சு.பசுபதிப்பிள்ளை தெரிவித்துள்ளார்.

நேற்று கிளிநொச்சி, அக்கராயன், கோணாவில் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலைகளில் அக்கராயன் பிரதேச தேசிய எழுச்சிப் பேரவையால் நடாத்தப்பெற்ற சமகால அர சியல் கருத்தரங்கில் கலந்து கொண்டு கருத்துரை வழங்குகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்; திருமலை நகரில் இரவோடிரவாக நிறுவப்பட்ட புத்தர்சிலையினை அகற்றுமாறு நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பினையே அரசு நடைமுறைப்படுத்தாத நிலையில் தமிழ் மக்களுக்கு நீதி கிடைக்கும் என்பது எந்தவகையில் சாத்தியமாகும். எனவே எமது சுதந்திரத்தை பெற்றுக்கொள்ளவேண்டுமெனில் போராடித்தான் பெற்றெடுக்கவேண்டும். எனவே தேசியத்தலைவரின் காலத்தில் நாம் அனைவரும் ஒன்றுபட்டு போராடி எமது விடுதலையை வென்றெடுப்போம் என உறுதி கொள்வோம் என்றார்.

அக்கராயன் பிரதேச அரசியல் துறை பொறுப்பாளர் திருமாறன் தலைமையில் நடைபெற்ற மேற்படி சமகால அரசியல் கருத்தரங்கில் கிளி.கோட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் சிறீ, அக்கராயன் தேசிய எழுச்சிப்பேரவை செயலர் சபாரத்தினம், துணைச்செயலர் ஜெயபாலன், செயற்பாட்டுக்குழு பிரதிநிதி சாந்தலிங்கம் ஆகியோர் கலந்து கருத்துரை வழங்கினர். மக்கள் அமைப்புக்களைச் சேர்ந்த நூற்றுக்கும் மேற்பட்ட பிரதிநிதிகள், பொதுமக்கள் இக்கருத்தரங்கில் கலந்துகொண்டனர்.

நேற்று முன்தினம் பூநகரி நல்லூர் சுமன் முன்பள்ளியில் நல்லூர் கிராம முன்னேற்ற சங்கத் தலைவர் கந்தவேள் தலைமையிலும், செட்டியா குறிச்சி பிள்ளையார் ஆலய முன்றலில் செட்டியார் குறிச்சி தேசிய எழுச்சிப்பேரவை செயலர் நாகராசா தலைமையிலும் சமகால அரசியல் கருத்தரங்கு இடம்பெற்றது.

மேற்படி கருத்தரங்குகளில் பூநகரி பிரதேச அரசியல்துறைப் பொறுப்பாளர் கலைக்குமரன், மக்கள் தொடர்பகப்பொறுப்பாளர் வின்சன் ஆகியோர்கலந்து கொண்டு கருத்துரை வழங்கினர்.

கடந்த வாரம் முதல் கிளிநொச்சி மாவட்டத்தில் பிரதேச ரீதியாகவும், கிராமரீதியாகவும் வீரமுரசு நிகழ்வும், சமகால அரசியல்கருத்துரைகளும், மாவீரர் பெற்றோர் கௌரவிப்பு நிகழ்வுகளும் இடம்பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது.(சோ)

## யாழில் விபத்து ஒருவர் காயம்

யாழ்.ஆரியகுளம் சந்திக்கும் ஆனைப்பந்தியடிச்சந்திக்கும் இடையே பஜீரோ வாகனம் ஒன்றும் உந்துருளி ஒன்றும் விபத்துக்குள்ளாகியதில் ஒருவர் காயமடைந்துள்ளார்.

பஜீரோ வாகனம் கட்டுப்பாட்டை இழந்து வீதியோரம் இருந்த மரத்துடன் மோதியுள்ளது.

இவ்விபத்தில் உந்துருளியில் வந்த இளைஞர் படுகாயமடைந்து யாழ்.போதனாவைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். பஜீரோ வாகனம் முன்பகுதி கடும் சேதத்திற்குள்ளாகியுள்ளது. (சு)

## சமுகம் தரவும்

2000ஆம் ஆண்டு தொடக்கம் இன்று வரை முல்லைத்தீவு கல்வி வலயப் பாடசாலைகளில் பகுதிநேர ஆங்கில ஆசிரியர்களாகக் கடமை புரிந்து தற்போது சேவையில் இல்லாதவர்களும், சேவையில் இருப்பவர்களும் தமது கல்வித்தராதரப் பத்திரங்கள், நியமனக்கடிதம் (முதலாவது, கடைசி) உட்பட அனைத்து ஆவணங்களுடனும் நாளை 9.00 மணிக்கு வலயக்கல்வி அலுவலகத்திற்கு தவறாது சமுகந்தரும்வண்ணம் முல்லை. வலயக் கல்விப்பணிப்பாளர் ப.அரியரத்தினம் தெரிவித்துள்ளார். (சோ)

# யாழ்.கந்தர்மடத்தில் கடை தீப்பற்றி எரிந்து நாசம்

(அலுவலக செய்தியாளர்)

யாழ்.கந்தர்மடம் சந்தியில் மின்சார ஒழுக்கு காரணமாக கடை ஒன்று முற்றாக எரிந்து நாசமாகியுள்ளது.



நேற்றுக் காலை 6.30 மணிக்கு கந்தர் மடம் சந்தி, அரசடி வீதியில் அமைந்துள்ள கிருஸ்ணபிள்ளை-கேதீஸ்வரன் என்பவருக்குச் சொந்தமான வரலட்சுமி பிளாஸ்ரிக் ஓட்டுத் தொழிலகம் எனும் வீட்டுடன் சேர்ந்த இத்தொழிலகம் மின்சார ஒழுக்கின் விளைவாக தீப்பற்றி எரிந்துள்ளது.

உடனடியாக அவ்விடத்திற்கு வந்த யாழ்.மாநகரசபை தீயணைக்கும் பிரிவினர் தீயை அணைப்பதற்கு கடும் முயற்சி எடுத்து தீயை அணைத்துள்ளனர். எனினும் கடையும், கடையுடன் சேர்ந்த சிறிய வீடும் முற்றாக எரிந்து நாசமாகியுள்ளது.

இச்சம்பவத்தில் மூன்று உந்துருளிகள் தொழிலுக்குப் பயன்படுத்தப்பட்டு வந்த பிளேட்ரிக் இயந்திரம் ஒன்று, சீர்செய்வதற்கு வந்திருந்த அறுநூற்று ஐம்பது உந்துருளிச் செட்டைகளும், இருபத்தையாயிரம் ரூபா பணமும், முற்றாக எரிந்து நாசமாகியுள்ளது.

இதனால் உரிமையாளருக்கு பன்னிரெண்டு இலட்சத்திற்கும் மேல் நட்டமேற்பட்டுள்ளது. (சு)

### சுனாமிக்குப்...

யும் அவர் விளக்கினார். தமிழர் புனர்வாழ்வுக் கழகம் தற்போது மேற்கொண்டு வரும் இரண்டாம் கட்டப் பணியாகிய தற்காலிக குடியிருப்பக்களை அமைப்பதற்கும் மூன்றாம் கட்டப்பணியாகிய கிராமஅபிவிருத்திக்கும் தேவையான பொருட்களை எடுத்துவருவதில் சிறிலங்கா இராணுவத்தினரால் சோதனை முகாம்களில் ஏற்படும் இடையூறுகள் குறித்து அவர் எடுத்துக் கூறினார். உயர்பாதுகாப்பு வலயம் காரணமாக நிலங்களை ஒதுக்கீடு செய்வதில் ஏற்படுகின்ற பிரச்சினைகளையும் விளக்கினார்.

### கண்காணி...

சந்தைக் கட்டடம் அமைக்கப்பட்ட போதும் பழைய சந்தைக் கட்டடத்தில் வியாபாரம் மேற்கொள்ளும் சிங்களவர்களுக்கு பாதிப்பு ஏற்படும் என்பதற்காக அரசாங்கம் இதுவரை திறக்கவில்லை என்பதை எழிலன் சுட்டிக்காட்டினார்.

இந்த நிலையில் சட்டவிரோதமாக அமைக்கப்பட்ட புத்தர் சிலையை அகற்றுமாறு நீதிமன்றம் உத்தரவிட்ட போதும் அதனையும் நிறைவேற்ற அரசாங்கம் முன்வரவில்லை.

எனவே எதிர்வரும் 2 ஆம் திகதி சட்டவிரோத புத்தர் சிலை அகற்றப் படாவிட்டால் பொதுமக்கள் மத்தியில் இருந்து பாரிய நெருக்கடி நிலை ஏற்படுவதற்கான வாய்ப்பு உள்ளதாகவும் எழிலன் எச்சரிக்கை விடுத்தார்.

### மருத்துவ...

சரியாக சுகாதார மேம்பாட்டினையும், அதற்கான வசதிகளையும் தென்னிலங்கையைப் போல் தமிழர் தாயகப் பகுதிகளில் திட்டமிடல்களும், செயற்பாடுகளும் ஒழுங்குபடுத்தப்பட்டு பேணப்படவேண்டும் என்ற தேசியத் தலைவர் அவர்களின் உயரிய சிந்தனையின் செயல்வடிமாக இக்கலந்துரையாடல் நடைபெறுகிறது என்றார் அவர்.

முற்பகல் 10 மணியளவில் தமிழீழ சுகாதார சேவைகள் பணிப்பாளர் ச.விக்கிரமன் தலைமையில் நடந்த இந்நிகழ்வில் வடக்கு,கிழக்கு மாகாண செயலாளர் எஸ்.ரெங்கராஜன் மற்றும் அம்பாறை, கல்முனை, மட்டக்களப்பு, திருகோணமலை, வவுனியா, மன்னார், கிளிநொச்சி, முல்லைத்தீவு, யாழ்ப்பாணம் ஆகிய பிரிவுகளின் பிரதி மாகாண சுகாதார பணிப்பாளர்கள் ஆகியோர் கருத்துரைகளை வழங்கினர். (தீ)

## கோண்டாவில் பகுதியில்

# உந்துருளியில் வந்தவர்களால் தாலிக்கொடி அறுப்பு

(நல்லூர்)

உந்துருளியில் வந்த இளைஞர்களினால் சுமார் ஒரு லட்சம் ரூபா பெறுமதியான தாலிக்கொடி அறுத்துச் செல்லப்பட்டுள்ளது.

நேற்று நண்பகல் 11.00மணியளவில் கோண்டாவில் இந்து மகா வித்தியாலயத்திற்கு முன்னால் இக்களவு இடம் பெற்றது.

கணவருடன் வந்த பெண்மணி கணவரை கடையில் பொருட்கள் வாங்க அனுப்பி விட்டு நடந்து வந்து கொண்டிருக்கும் போது உந்துருளியில் பின்னால் வந்த இளைஞர்கள் இப்பெண்ணின் தாலிக்கொடியை அறுத்துக் கொண்டு சென்றுள்ளனர்.

கோண்டாவில் புகையிரத நிலையத்திற்கு முன்னால் உள்ள திருமதி. சண்முகராசா என்பவரின் தாலிக்கொடியே அறுத்துச் செல்லப்பட்டதாகும். இதுபோன்ற சம்பவங்கள் யாழ். குடாநாட்டில் அதிகரித்துக் காணப்படுகின்றது. (41)

### சு.ப.தமிழ்ச்செல்வன

இணைப்புச் செயலகமொன்றை கிளிநொச்சியில் அமைத்து இணைப்பாளர் ஒருவரையும் நியமித்தல் திருமலையில் அமைக்கப்பட்ட புத்தர் சிலையை எதிர்வரும் இரண்டாம் திகதிக்குப் பின்னரும் அகற்றப்படாத பட்சத்தில் மாவட்ட ரீதியாகவும், தமிழீழ தாயக ரீதியாகவும் மேற்கொள்ள வேண்டிய முக்கியமான வேலைத்திட்டங்கள் குறித்து கலந்துரையாடப்பட்டது.

யுத்த நிறுத்த ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டு மூன்று வருடங்கள் கடந்த நிலையிலும் அவை முழுமையாகக் கடைப்பிடிக்கப்படாததால் தமிழ் மக்கள் எதிர்நோக்கும் நெருக்கடி நிலைமைகள் குறித்தும் கலந்துரையாடப்பட்டன.

இக்கலந்துரையாடலில் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்கள் அனைவரும் கலந்து கொண்டனர்.(ச)

### மட்டக்களப்பில்...

இவர் அந்த இடத்திலேயே உயிரிழந்தார். சம்பவம் இடம்பெற்ற இடத்தையும் சடலத்தைதையும் நேரில் சென்று பார்வையிட்ட மட்டக்களப்பு மாவட்ட மேலதிக நீதிபதி எம்.எச். எம் அஜ்மீர் சடல பரிசோதனையின் பின்பு சடலத்தை உறவினர்களிடம் கையளிக்குமாறு பொலிசாருக்கு உத்தரவிட்டார்.

இது தொடர்பான மரண விசாரணையை எதிர் வரும் திங்கட்கிழமைக்கு ஒத்திவைத்தார்.

### அமெரிக்க...

என்று கேட்டுக்கொண்டார்.

இந்த பொதுக்கட்டமைப்பானது அனைத்து இனப்பிரதிநிதிகளையும் கொண்டிருக்கும் என்று நம்புவதாகவும் இந்தப் பொதுக்கட்டமைப்பு ஒரு நல்லயோசனை என்றும் தெரிவித்தார்.

தமிழீழ விடுதலைப்புலிகளின் நிர்வாகப் பகுதியை ஏன் பார்வையிடவில்லை என்று அந்தக் கூட்டத்தில் எழுப்பப்பட்ட கேள்விக்கு, அது குறித்தும் சிந்தித்துக் கொண்டிருக்கின்றேன். மீண்டும் மீண்டும் நான் இங்கு வர உள்ளேன். அப்பகுதிகளையும் பார்வையிட விரும்புகிறேன். இந்த நாட்டின் ஒவ்வொரு பகுதியையும் நான் பார்வையிட விரும்புகிறேன் என்றார்.

கடலோரத்தில் 100முதல் 200 மீற்றர்வரை ஆழிப்பேரலைக்கு முன்பு வாழ்ந்த மக்களை வேறு இடத்திற்கு மாற்றுகின்ற அரசின் முடிவு குறித்து கவலை தெரிவித்த கிளிங்டன் அது நடைமுறைச் சாத்தியமற்றது. இதற்குத் தீர்வாக அப்பகுதியில் வலிமையான குடியிருப்புக்களை அமைக்கலாம் எனவும் தெரிவித்தார்.

இதன் பின்னர் கொழும்பு திரும்பிய அவர் சிறிலங்கா சனாதிபதி சந்திரிகாவைக் கொழும்பில் சந்தித்துப்பேசினார்.

சந்திப்பு பிற்பகலில் நடைபெற்றது. சந்திப்பிற்குப் பின்பு கொழும்பு ஊடகவியலாளர்களிடம் பில்கிளிங்டன் கூறியதாவது;

பொதுக்கட்டமைப்பை உருவாக்குவதில் சிறிலங்கா சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தீவிரமாக உள்ளார். இந்தப் பொதுக்கட்டமைப்பு உள்ளூர் அமைப்புகள் அளவில் இயங்க உள்ளதால் பாதிக்கப்பட்டோர் தொடர்பான வேறுபாடுகள் களையப்படக்கூடும்.

இந்தப் பொதுக்கட்டமைப்பை நான் முழுமையாக ஆதரிக்கிறேன். தமிழீழ விடுதலைப்புலிகளுக்கும், சிறிலங்கா அரசுக்கும் இடையேயான அமைதிப் பேச்சுக்களில் நான் பங்கேற்கமாட்டேன் என்றார் அவர்.

இதேவேளை ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் மேற்கொள்ளப்படும் மீள்கட்டுமானப் பணிகளைப் பார்வையிடவே ஐ.நா.விசேட பிரதிநிதி கிளிங்டன் வருகை தருவதாகக் கூறப்பட்டது.

ஆனால் அப்படியான எந்த ஒரு பகுதியையும் அவர் பார்வையிடவில்லை. கல்முனை கலந்துரையாடலை முடித்தபின் நேரடியாக கொழும்பிற்குத் திரும்பிவிட்டார். இவரது வருகையையொட்டி நேற்று முன் தினம் முதல் சனாதிபதி மற்றும் அமைச்சரவை பாதுகாப்புப் பிரிவினரின் பாதுகாப்பு நடவடிக்கைகள் மேலதிகமாக இப் பிரதேசத்தில் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

நேற்றுமுன்தினம் முதல் நேற்றுப் பிற்பகல் வரை பாதுகாப்புக் காரணங்களுக்காக கையடக்கத் தொலைபேசிகளின் தொடர்புகளும் துண்டிக்கப்பட்டிருந்தன.

உள்ளூர் செய்தியாளர்கள் இவரது வருகை தொடர்பான செய்திகளை சேகரிப்பதற்கு அனுமதியளிக்கப்படவில்லை. கொழும்பிலிருந்து அமெரிக்கத் தூதரகத்தின் அனுமதி பெற்ற செய்தியாளர்கள் குழுவினருக்கே இந்த அனுமதி வழங்கப்பட்டது.

### இனப்பிரச்சினைக்கு...

யுத்த நிறுத்த ஒப்பந்தம் இதற்கான வழியையேற்படுத்தியிருக்கிறது எதிர் பாராத விதமாக இந்த அமைதி முயற்சிகள் முடங்கிக் கிடக்கின்றன.

இடை நிறுத்தப்பட்ட அமைதிப் பேச்சுக்களை மீண்டும் தொடங்கி இனப்பிரச்சினைக்கான இறுதித் தீர்வை உருவாக்க அனைத்துத் தரப்பினரும் உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டும் என்று அமெரிக்கா கேட்டுக் கொள்கிறது.

சிறிலங்காவில் ஆயுதப்போராட்டம் உள்ளிட்ட விடயங்கள் இருந்தபோதும் குறிப்பிடும் படியாக மக்கள் வாழ்க்கைத்தரம் உயர்த்தப்பட்டிருக்கின்றது.

அமைதிப் பேச்சுக்கள் வெற்றி பெற்றுவிட்டால் வறுமை ஒழிப்பு மற்றும் பொருண்மிய வளர்ச்சிநிலை ஆகியவற்றிற்கான பலத்தை சிறிலங்கா பெற்றுவிடும். சிறிலங்காவில் கல்விகற்றோர் அதிகம். இதைப்பயன்படுத்தி தொழில் நுட்பத் துறையில் புதிய தொழிற்சாலைகளை உருவாக்க முடியும்.

பொருளாதார சீர்திருத்தங்களை சிறிலங்கா முழுமையாகச் செயற்படுத்தினால் சிறிலங்காவின் அனைத்து மக்களும், பாதுகாப்பான உத்தரவாதமான எதிர்கால வாழ்க்கையைப் பெறுவர். ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்ட இலங்கை மக்களுக்கும் உதவ சர்வதேச சமூகத்துடன் அமெரிக்கா இணைந்து நிற்கிறது. அமெரிக்க அரசின் சார்பில் ஆயிரக்கணக்கான அமெரிக்கர்கள் இந்த மீள் கட்டமைப்பை மேற்கொண்டு வருகின்றனர் என்றார்.

அமெரிக்க அதிபர் புஷ்சுக்கு சிறிலங்கா சார்பில் நன்றி தெரிவித்த தூதர் குணதிலக்க அமெரிக்காவின் நட்பு நாடாக சிறிலங்காவை அங்கீகரித்திருப்பதற்கு மகிழ்ச்சி என்றும், உலகளாவிய பயங்கரவாதத்திற்கு எதிரான போரில் அமெரிக்காவை சிறிலங்கா ஆதரிக்கும் என்றும் கூறினார்.

அமெரிக்காவுக்கும், சிறிலங்காவிற்கும் இடையேயான தற்போதைய இராணுவ ஒப்பந்தங்கள் குறித்தும் குணதிலக்க இச் சந்திப்பின்போது மகிழ்ச்சி தெரிவித்துக் கொண்டார்.

இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2005 ஆம் ஆண்டு மே மாதம் 29ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.